பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 30 செவ்வாய்க்கிழமை 15.08.2023 கதிர் 277

# 13ஐ நடைமுறைப்படுத்த காலை வாரியது 'மொட்டு'

## தற்போது மக்கள் அதிகார பரவலாக்கத்தை எதிர்பார்க்கவில்லையாம்

நாட்டு மக்கள் தற்போது அதிகார பரவலாக்கலை எதிர்பார்க்கவில்லையென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். அரசமைப்பின்13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவே அவர் இதனைத் தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள பொதுஜன பெரமுனவின்தலைமையகத்தில்நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத்தெரிவித்தார்.இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி அதிகாரத்தை பரவலாக்குவது தொடர்பான விடயத்தை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு, பிரதான பிரச்சினையான பொருளாதாரத்தை கட்டியெழுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கல் யோசனை தற்போதைய சந்தர்ப்பத்தில் அவசியமற்றதொன்றாகும்.ஆகவேஅதனுடன் தொடர்புடையவிடயங்களைமறந்து ☞ 2

# இது ரகசியம் அல்ல!



சீனாவின் மூன்றாவது கப்பலும் இலங்கைக்கு வருகின்றது என்கிற செய்தி நேற்றுப் பரபரப்பாக ஊடகங்களில் அடிபட்டது. ஏற்கனவே சீனாவின் விண்வெளி ஆய்வுக் கப்பலான யுவான் வாங் -5 அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்கு வந்து சென்றமை இந்தியாவால் சர்ச்சைக்குள்ளாகி இருந்த நிலையில், தற்போது அதுபோன்ற ஒரு கடல் ஆய்வுக் கப்பல் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டைக்கு வர இருக்கின்றது என்கிற செய்தியே அது.

இந்தியாவின் ஹிந்துஸ்தான் டைம்ஸ் வெளியிட்ட செய்தியைத்தான் பின்னர் இங்குள்ள ஊடகங்களும் செய்தியாக்கி இருந்தன. மூன்றாவது சீனக் கப்பலான ஷி யான் -6 ஒக்டோபரில் வரப்போகிறது என்பதாகத்தான் நேற்றைய செய்திகள் அனைத்தும் தெரிவித்திருந்தன. அப்படி அந்தக் கப்பல் இலங்கைக்கு வர விண்ணப்பித்திருப்பது என்னவோ உண்மைதான். ஆனால், இலங்கை அதற்கு இன்னும் அனுமதி வழங்கவில்லை. ஆனால் அப்படி அனுமதி வழங்கப்படாமல் போவதற்கான சாத்தியங்கள் வெகு குறைவே.

கடந்த முறை சீன ஆய்வுக் கப்பல் அம்பாந்தோட்டைக்கு வந்தபோது இந்தியா அதற்குத்தனதுபூர்வாகங்கஆட்சேபனையை இலங்கைக்குத் தெரியப்படுத்தி ☞ 2

# சந்தியைக் கடக்க பாய்ந்த டிப்பர் மோதி பெண் சாவு

## கோப்பாயில் நேற்று மாலை பயங்கரம்

யாழ்ப்பாணம் - கோப்பாய் சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். வீதி சமிக்ஞை விளக்கில் இறுதிக் கணத்தில் வேகமாகப் பாய்ந்த டிப்பர் சமிக்ஞை விழுந்ததனால் மறுபுறத்தால் முன்னேறிய மோட்டார் சைக்கிளோட்டியை மோதிப் பந்தாடியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த ☞ 2

# முதலில் மாகாணத் தேர்தல் பின்னரே 13 பற்றிய பேச்சு

## இதுவே மக்கள் சக்தியின் நிலைப்பாடு

13ஐ நடைமுறைப்படுத்து தொடர்பான கலந்துரையாடல்களுக்கு முன்னதாக மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டுமெனஐக்கியமக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஏரான் விக்கிரமரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் அதிகாரங்களைப் பகிர்வதற்கு பதிலாக அதிகாரங்களைக் குவிக்கும்செயற்பாடே முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதனால் பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலை நீடிக்கின்றது.

இந்தநிலையில்ஜனாதிபதி 13ஆவது திருத்தச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தப் போவதாக தெரிவித்து அழகிய நீண்ட பேச்சுக்களை முன்னெடுக்கின்றார்.

இதனால் எவ்விதமான பயனுமில்லை. எம்மைப் பொறுத்தவரையில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்திய பின்னரே 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடை ☞ 2

# சமஷ்டியில் சமரசம் இல்லை; ஆனால் 13ஐ அமுல்படுத்தி தேர்தலை நடத்துக

## ரணிலுக்கு சம்பந்தன் நேற்றுக் கடிதம்

கூட்டாட்சிக் கட்டமைப்பில்ளங்களின்நிலைப்பாட்டில் சமரசம் செய்து கொள்ளாமல், அரசமைப்பில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் விரைவாக அமுல்படுத்தவும், நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலை நடத்தி, தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கையை எடுக்கவும்

இவ்வாறு தெரிவித்து ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ளார் தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவர் இரா.சம்பந்தன். அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் அரசியல் கட்சிகள் தமது பரிந்துரைகளை ஓகஸ்ட் 15க்கு (இன்று) முதல்வழங்குமாறுஜனாதிபதி அறிவித்திருந்தார். அதன்படி தமது கட்சியின் நிலைப்பாட்டை இந்தக் கடிதம் மூலம் தெரியப்படுத்தியிருக்கிறார் சம்பந்தன். கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1948 ஆம் ஆண்டு பிரித்தானியரிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதில் இருந்து, தொடர்ந்து அதிகாரத்திற்குவந்தஅனைத்து ஆட்சியாளர்களிடமிருந்தும் தமிழ் மக்கள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வைக் கோரி வருகின்றனர். குறைந்த பட்சம்1956முதல், ஒவ்வொரு தேர்தலின் போதும், தமிழ் மக்கள் இதனை அடைவதற்கானஒருகூட்டாட்சி ஏற்பாட்டிற்கான ஆணையை வழங்கியுள்ளனர். ஒருமுறை, 1977இல், தனிநாடுகோரினர்.

இந்தியா தனது நல்ல வகிபாகத்தை 1983 இல் வழங்கியது, அது ☞ 2

# என்றும் மாற்றமடையா சுற்றுலாக் கொள்கை

## விரைவில் அறிமுகம் என்கிறார் அமைச்சர்

அரசியல்வாதிகள் மாறினாலும், மாறாத சுற்றுலாக் கொள்கை விரைவில் முன்வைக்கப்படும்என்றுசுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்தகாலங்களில்வீழ்ச்சியடைந்திருந்த சுற்றுலாத் துறை, தற்போது முன்னேற்றமடைந்து வருகிறது. ஆனாலும் நாம் எதிர்பார்த்துள்ள இலக்கை இன்னும் அடையவில்லை. படிப்படியாக நாம் சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டும்.

சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு நம் நாட்டில் உள்ள ஹோட்டல் அறைகள் போதுமானதாக இல்லை. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில், தற்போது நாடு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக ஸ்திர நிலையை அடைந்து வருவதால் எமது நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

எனவே நாம் அவர்களுக்குப் பொருத்தமான தங்குமிட வசதிகளை ☞ 2

# மீண்டும் இரத்த ஆறு ஓட ஜனாதிபதி அனுமதியார்

## வன்முறைக்கு இனி அனுமதி இல்லை; பிரதமர் தினேஷ் திட்டவட்ட அறிவிப்பு

'இனவாதத்தாலும் வன்முறையாலும் மீண்டும் இங்கு இரத்த ஆறு ஓடக் கூடாது என்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாகவுள்ளார்' என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா, தமிழர்களின் தலைகளைக் கொய்வேன் என்று தெரிவித்தது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இனவாதக் கருத்துக்கள் ஊடாக வன்முறையைத் தூண்ட இந்த நாட்டில் எவருக்கும் இனி அனுமதி இல்லை.

இன, மதபேதமின்றிநாம் செயற்படவேண்டும். நாட்டின் பிரஜைகள் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போன்று ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.

அப்போதுதான் நல்லிணக்கம் இங்கு நிரந்தரமாகும்.- என்றார்.

தான்வடக்கு, கிழக்குக்குச் செல்லவுள்ளதாகவும், அங்கே விகாரைகள் மற்றும் பிக்குகள் மீது கை வைக்க முயன்றால் அங்குள்ளவர்களின் தலைகளுடனே ய ☞ 2

# கால் பங்கு மருத்துவர்கள் நாட்டை விட்டோட தயார்

## எச்சரிக்கிறது மருத்துவ அதிகாரிகள் சங்கம்

நாட்டில் உள்ள மருத்துவர்களில்கால்பங்கினர்எந்த நேரத்திலும் நாட்டைவிட்டு வெளியேறத் தயாராக இருக்கின்றனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் வைத்தியர் சமில் விஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போதுஅவர்இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2022ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி இந்த ஆண்டு மே 31வரையிலும் 841 மருத்துவர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

விசேட வைத்திய ☞ 2

# மருத்துவர்களை இறக்குமதி செய்யும் நிலைமை ஏற்படும்

## மருத்துவ சங்க செயலர் எச்சரிக்கை

மருத்துவர்கள் பற்றாக்குறைதொடருமானால்வெளிநாடுகளிலிருந்து மதுத்துவர்களைவரவழைக்கவேண்டியநிலைமைவிரைவில்ஏற்படலாமெனவிசேடமதுத்துவர்கள் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் மருத்துவர்அசோககுணரத்ன தெரிவித்தார்.

வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சியாளர்கள் விதித்துள்ள அதிக வரிப்பணமும் தற்போது நாட்டில் நிலவும் உறுதிப்பாடற்றநிலையும்தான் மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முக்கிய காரணங்களாக உள்ளன. மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால் வைத்தியசாலைகளில்நெருக்கடிகள் ஏற்படுகின்றன.

மதுத்துவர்களின் எண்ணிக்கைகுறைந்தநிலையில் இருவர் இருந்த இடத்தில் ஒருவரையும் அல்லது மூவர் இருந்தஇடத்தில்இருவரையும் பணிக்கமர்த்த வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இதனால் சில நாடுகள் போன்று வெளிநாடுகளில் இருந்து மருத்துவர்களை வரவழைக்க வேண்டிய நிலைமைஏற்படும் - என்றார்

# ஆளும் தரப்புக்குள் விரைவில் புதிய அணி தோற்றம்பெறும்

## சுதந்திர மக்கள் சபை எம்.பி. கருத்து

ஆளும்தரப்புக்குள்புதிய எதிரணியொன்று வெகுவிரையில்தோற்றம்பெறுமென சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமானபேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாவலவில் உள்ள சுதந்திர மக்கள் சபையின் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியிலும் ஊழல்மோசடி முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை. சுங்க திணைக்களம், மதுவரி திணைக்களம், மோட்டார்வாகனபதிவாளர்திணைக்களம், தேசிய இறைவரித் திணைக்களம் மற்றும் தொடருந்துத் திணைக்களம் ஆகிய அரச திணைக்களங்களில் இடம்பெறும் ஊழல்மோசடிகளை குறைந்தபட்சமேனும் நிவர்த்தி செய்துக் கொண்டால் நாட்டு மக்கள் மீது வரிச் சுமையை சுமத்த வேண்டிய ☞ 2

# அதிகாரப் பகிர்வின் மூலம் சுயநல அரசியலில் ரணில்

## உதய கம்பன்பில எம்பி தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது அதிகாரப்பகிர்வின்மூலமாகத் தனது சுயநல அரசியலையே முன்னெடுப்பதற்குத்தயாராகி வருகின்றார்என்றுபிவித்துருஹெலஉறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானஉதயகம்மன்பில தெரிவித்தார்.

கோட்டேயில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது அதிகாரப் பகிர்வின் மூலமாகத் தனது சுயநல அரசியலையே முன்னெடுப்பதற்குத் தயாராகி வருகின்றார்.

அவர் அதிகாரங்களைப் பகிர்வதாகக் கூறி, மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட மாகாண சபைகளுக்கு தேர்தலை நடத்தாது, தனது தேர்தல் பரப்புரைக்காக ஆளுநர்கள் மற்றும் இதர தரப்பினருக்குஅதிகாரங்களை வழங்குவதற்குமுயல்கின்றார்.

ஆகவே இந்தச் செயற்பாடானது, அதிகாரத்தினைப் பகிரும் செயற்பாடு ☞ 2

# ரணிலை விரட்ட அணி திரளுமாறு ஜே.வி.பி. தலைவர் அறைகூவல்

நாட்டின் இறைமையையும், சுயாதீனத்தினையும் முழுமையாக இழக்கச் செய்யும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ரணிலை பதவியிலிருந்து நீக்குவதற்கு ஒன்றுபடுமாறு ஜேவி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களால் நிராகரிக்கப்பட்டுஒதுக்கப்பட்ட தலைவர் ஆவார். துற்போது அவர் குறுக்கு வழியால் ஜனாதிபதி பதவியில் அமர்ந்துள்ளார்.

அவ்வாறானநிலையில், ஜனாதிபதி ரணில் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இருந்தது. ஆனால், அது முன்கூட்டியேதிட்டமிடப்பட்ட பயணம்என்பதால்அதனைத் தடுக்க முடியவில்லை என்று சாக்குப்போக்குச் சொல்லி கப்பல் வந்து செல்வதற்கு அனுமதி வழங்கியது இலங்கை.

இந்த அனுபவத்தை அடுத்து இந்தத் தடவை மூன்றாவது சீனக் கப்பல் வருவதற்கு முன்பாகவே அது பற்றிய அறிவித்தலை இலங்கைஅயலுறவுத்துறை அமைச்சு இந்தியாவிற்கு வழங்கிவிட்டது. இது தொடர்பில் இந்தியாவின் கரிசனைகள், அக்கறைகளுக்குப் பதிலளிக்கும் விதத்திலேயே இந்த முன்னறிவிப்பு இலங்கையால் வழங்கப்பட்டுள்ளது.

அதனுடைய அர்த்தமே கப்பல் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கப்படப்போகிறது என்பது தான். இந்தியாவின் ஆட்சேபனைகள் அல்லது அக்கறைகள் தெரியப்படுத்தப்பட்டால், அதற்கேற்ப அந்தக் கப்பலின் நகர்வுகள் இலங்கையினால் திட்டமிடப்படும் என்பது மட்டுமே இதில்நடக்கக்கூடியகாரியம். மற்றும்படி கப்பலின் இலங்கை வருகையைத் தடுத்து நிறுத்தும் வல்லமை இந்தியாவுக்கும் இல்லை, இலங்கைக்கும் இல்லை என்பதே உண்மை.

வரப்போகிற கப்பல் சுமார் 4 ஆயிரம் தொண் நிறையுடைய மிகப் பெரிய கப்பல். கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சின் கீழ் உள்ள நாரா எனப்படும் கடல் ஆய்வு நிறுவனத்துடன் சேர்ந்து கடல் ஆய்வுகளைச் செய்வதற்காக இந்தக் கப்பல் வருகின்றது. அது மட்டுமல்ல தெற்கில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றுடன் சேர்ந்து கடல் ஆய்வுகளைச் செய்வதும் கப்பலின் இந்தப் பயணத்தின் நோக்கம். நாரா நிறுவனத்தால் சில ஆண்டுகளுக்கு முன்னர் விடுக்கப்பட்ட கோரிக்கையின் கீழ்கப்பலின்இந்தப்பயணம் திட்டமிடப்பட்டிருக்கின்றது என்று தெரிகிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 13ஐ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுமாறு ஜனாதிபதியிடம் கோருகிறோம். பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் விடயத்தை மக்கள் ஜனாதிபதியிடம் இருந்து எதிர் பார்க்கின்றனர்.

நாடுஇன்னும்வங்குரோத்து நிலைமையில் இருந்து மீளாத நிலைமையின் கீழ் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுஅந்தளவுக்கு உகந்த விடயமாக நாங்கள் கருதவில்லை.

நாடு வீழ்ச்சியடைந்துள்ள சந்தர்ப்பத்தில், நாட்டை ஸ்திரமற்ற நிலைமைக்குள் தள்ள வெளிநாட்டு சக்திகள், பல்வேறு அரசசார்பற்ற அமைப்புகள் முயற்சித்து வருகின்றன.

பொருளாதார ஸ்திரமற்ற நாட்டுக்குள் பல்வேறு விடயங்கள் பற்றி பேசி மறைமுகமாக ஆதாயம் தேட முயற்சிக்கும் சிலரும்

## என்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதற்குப் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகிறது. தமது சொந்தக் கட்டடங்களை சுற்றுலா விடுதிகளாக பயன்படுத்த விருப்பமுள்ள கட்டட உரிமையாளர்கள் சுற்றுலா சபையில் பதிவு செய்து கொள்ள முடியும், அதன் மூலம் அவர்கள் வருமானம்ஈட்டுவதுடன்நாட்டின் சுற்றுலாத் துறையின் மேம்பாட்டுக்கும் உதவ முடியும்.புதிய சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்கு வரவழைக்கும்வகையில்நாட்டின் அழகிய இடங்கள் குறித்த குறும்பட விழாவொன்று நடத்தப்படவுள்ளது. இந்த நாட்டில் உள்ள எவரும் இதில் பங்கேற்கலாம். சிறந்த குறும்படத்திற்கு பரிசில்களை வழங்கப்படவுள்ளது. அவர்களின் எதிர்காலப் பணிகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கான பயிற்சிகளை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

விரிவான கலந்துரையாடல்களுக்குப் பின்னர், சுற்றுலாத் துறைக்கான புதிய கொள்கை ஒன்றை வகுக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது நடைமுறைக்கு வருமிடத்து, நாட்டில் அமைச்சர்கள் மாறினாலும், எப்போதும்மாறாதநிலையான சுற்றுலாக் கொள்கையுடைய சுற்றுலாவேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

பல்வேறு தரத்தினைக் கொண்டஹில்டன்ஹோட்டல் வலையமைப்பின்அதிகூடிய தரத்தைக்கொண்டஹில்டன் ஹோட்டல் ஒன்றை யால பிரதேசத்தில் ஒகஸ்ட் 19 ஜனாதிபதிதிறந்துவைப்பார். அதனுடன்இணைந்தவகையில் சுற்றுலாப் பரப்புரை வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

சுற்றுலாத் துறையின் முன்னேற்றத்தை நோக்கமாகக்கொண்டு ஹோட்டல் பாடசாலைமாணவர்களுக்கு எதிர்வரும் காலங்களில் பல்வேறு துறைசார் பயிற்சிகளை வழங்கத் திட்டமிட்டுள்ளோம்., அதன் மூலம் அவர்கள் இந்நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறப்பான சேவையைவழங்கமுடியும்.

எமது நாட்டில் உள்ள பிரசித்திபெற்ற சுற்றுலாத் தலங்களில்தற்போதுள்ளசன நெரிசலைத்தவிர்க்கபல்வேறு புதிய வேலைத்திட்டங்கள் குறித்து கவனம் செலுத்தி வருகின்றோம். குறித்த ஒரு சில சுற்றுலாத் தலங்கள் தொடர்பாகவே அதிகளவானோர் தெரிந்து வைத்திருக்கின்றனர். அவை தவிர சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய இடங்கள் எமது நாட்டில்அதிகளவில்உள்ளன. அவை பற்றி சுற்றுலாப் பயணிகளுக்கு தெரியப்படுத்தக் கூடிய விளம்பர ரீதியிலான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கப்படவுள்ளன.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து சுற்றுலாத் துறைப் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இந்நாட்டுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படும்இடையூறுகள்மற்றும் மோசடிகள்போன்றகசப்பான அனுபவங்கைளைத் தடுக்க புதியகண்காணிப்புவேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு சுற்றுலா செயலி ஒன்றை உருவாக்கும்பணிகள்நடந்து வருகின்றன. குறித்த செயலி, பயன்பாட்டுக்கு வந்தவுடன் சுற்றுலாப் பயணிகளுக்கு எதிரான இடையூறுகள், குறிப்பாக நிதி மோசடிகள் இதன் மூலம் தடுக்கப்படும் -என்றார்.

இதேவேளை, காணி உறுதிப்பத்திரங்கள் வழங்குதல் குறித்து செய்தியாளர் ஒருவர்எழுப்பியகேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், காணி உறுதிப்பத்திரங்கள்வழங்கும் பணியை பல்வேறு அரச நிறுவனங்கள்தனித்தனியாக முன்னெடுப்பதன் ஊடாக பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. தற்போது ஜனாதிபதியின்பணிப்புரைக்குஅமைய, அது தொடர்பில் அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்படக் கூடிய வகையில் காணி தொடர்பிலான புதிய கொள்கையொன்றைவகுக்கத்திட்டமிட்டுள்ளதாகவும் அதன் பின்னர் முழு உரிமையுள்ள காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## முதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்படுத்துவது தொடர்பில் அனைத்துக் கட்சிகளுடனும்உரையாடிநடைமுறைச் சாத்தியமான விடயங்களை முன்னெடுக்கலாம்-என்றார்.

## ஆளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவை ஏதுமில்லை என அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன குறிப்பிடுகிறார்.

ஊழல்மோசடியையில்லா தொழிக்க நடைமுறைக்குச் சாத்தியமான எந்த நடவடிக்கைகளையும் ஆளும் தரப்பு எடுக்கவில்லை. பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களை மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் மக்கள் மீது வரி விதிப்பு மனசாட்சி இல்லாமல் சுமத்தப்பட்டுள்ளது.

ஆட்சியாளர்களின் தவறான தீர்மானத்தினால் உடவளவ வலய விவசாயிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். விவசாயிகள் வீழ்ச்சியடைந்தால் அதன் தாக்கத்தை ஒட்டுமொத்த மக்களும்எதிர்கொள்கிறார்கள். சமனல அணையில் இருந்து உடவளவ விவசாய வலயத்துக்கு நீர் விடுவிக்காதது தவறு என விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிடுகிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில் தான் விவசாயத்துறை அமைச்சர், மின்சாரத்துறை அமைச்சர், நீர்பாசனத்துறை மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் ஆகியோர் உள்ளார்கள்.

ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய மூன்று அமைச்சுக்களும் முரண்பட்டு நிற்கின்றனர். இறுதியில் விவசாயிகள்தான் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அமைச்சரவைக்கும்இடையில்இணக்கப்பாடற்ற தன்மை காணப்படுகிறது. வெகுவிரையில் ஆளும் தரப்புக்குள் புதிய எதிரணி ஒன்று தோற்றம் பெறும் - என்றார்.

## கால் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபுணர்கள் 277பேர் இந்த நாட்டில் சேவை ஆற்றுவதை கைவிட்டு வெளியேறியுள்ளனர். அதிதீவிர சிகிச்சை அளிக்கும் விசேட வைத்தியநிபுணர்கள்33பேர் வரையில்நாட்டில்இருந்தனர். தற்போதுஅந்தஎண்ணிக்கை 7ஆகக் குறைந்துள்ளது.

தற்போதைய நிலையில் பிரித்தானியா, ஆஸ்திரேலியா, மத்திய கிழக்கின் ஓமான், டுபாய் போன்ற நாடுகளில் பணியாற்றுவதற்கான பரீட்சைகளை நிறைவுசெய்த நிலையில் ஐயாயிரம் பேர் வெளியேறத் தயாராக உள்ளனர்.

அந்த வகையில் பார்க்கும்போதுஇந்தநாட்டின்மருத்துவர்களில் கால்பங்கினர் எந்த நேரத்திலும் நாட்டை விட்டுவெளியேறிச்செல்லும் நிலைமையே உள்ளது - என்றார்.

## சந்தியைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கௌரிமலர் (52 வயது) என்பவர் விபத்து நடந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண் கோப்பாய் சமுர்த்தி வங்கியின் முகாமையாளராகப் பணியாற்றி வந்தார். விபத்துத் தொடர்பில் கோப்பாய் காவல் துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரணிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கநாட்டின்இறைமை மற்றும் சுயாதீனத்தை முழுமையாக இழக்கச் செய்யும் தீர்மானத் திற்கு வந்துள்ளார்.

அவ்விதமான தலைவர் பதவியில் இருப்பது பொருத்தமானதா? ஆகவே அவரை அப்பதவியில் இருந்து அகற்ற வேண்டாமா? ஆதற்காக நீங்கள்எங்களுடன்ஒன்றுபட வேண்டாமா - என்றார்.

## அதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்ல, அதிகாரத்தினை குவிப்பதாகும். அந்த விடயத்தினை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ள நிலையில்அதற்குநியாயமானபதிலளிக்கப்படாது சர்வகட்சிக் கூட்டத்தினை நடத்துவதில் பயனில்லைஎன்றமுடிவினை நாம் கொண்டுள்ளோம் -என்றார்.

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களனிக்குத் திரும்பவுள்ளதாகவும் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருந்தார்.

## சமஷ்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைஆட்சியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது,அதன் விளைவாக 1987 ஜூலை 29 அன்று இந்திய-இலங்கை ஒப்பந்தம்கையெழுத்தானது. அதன் பின்னர் இலங்கை அரசமைப்பில் 13ஆவது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது, இது ஒரு மாகாண சபை அமைப்பை நிறுவியது. மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வு. ஆனால் இந்தத்திருத்தம்ஒற்றையாட்சி அரசமைப்பின்கீழ்அறிமுகப் படுத்தப்பட்டது, இதன் விளைவாக நிலம் மற்றும் பொலிஸ் ஆகிய முக்கிய அதிகாரங்கள் இன்னும் செயல்படுத்தப்படாமல் உள்ளது என்ற உண்மையைப் பேசாமல், கொழும்பு ஆட்சியாளர்கள் அவ்வப்போது வழங்கப்பட்ட அதிகாரங்களையும்திரும்பப்பெற்றனர்.

1987 நவம்பரில், இந்திய அரசு ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனாவிடம்இருந்து இவைசரிசெய்யப்படும்என்ற உறுதிமொழியைப்பெற்றது. இந்தப் பின்புலத்தில்தான், அதன்பின் எடுக்கப்பட்ட ஒவ்வொரு முயற்சியும் 13ஆவது திருத்தச் சட்டத்தைக் கடந்து கூட்டாட்சிக் (சமஷ்டிக்) கட்டமைப்பை நோக்கி நகர்த்தின. அதில் பல முன்மொழிவுகள் குறிப்பிடத்தக்கன.

முதலாவதாக, 1993 இல், ஜனாதிபதி ஆர். பிரேமதாசவின் காலத்தில் மங்கள மூனசிங்க தெரிவுக் குழு இந்திய மாதிரியின் அடிப்படையில் அதிகாரப் பகிர்வை பரிந்துரைத்தது. ஒருங்கு நிரல் அல்லது பொதுப்பட்டியல் ஒழிக்கப்பட வேண்டும் அல்லது அதில் உள்ள பெரும்பாலான விடயங்கள் மாகாணப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளை இணைக்கும் உயர்மட்ட சபையை அது மேலும் முன்மொழிந்தது.

இரண்டாவதாக, ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கீழ் 1995 மற்றும் 1997 இல் அரசமைப்பு சீர்திருத்தங்களுக்கான அரச முன்மொழிவுகள் மற்றும் 2000 இன் அரசமைப்பு சட்டமூலம், அனைத்தும் விரிவான அதிகாரப்பகிர்வை முன்மொழிந்தன,மேலும்ஒற்றையாட்சி கட்டமைப்பைக் கைவிட்டன.

மூன்றாவதாக, 2002 டிசெம்பரில், ஒஸ்லோவில் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சு நடைபெற்றது. இந்தப் பேச்சுக்களில், தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடங்களில் உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு தீர்வை ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டிகட்டமைப்பின்அடிப்படையில் ஆராய்வதற்கு கட்சிகள் ஒப்புக்கொண்டன.

நான்காவதாக, 2006 இல், ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவையும் (APRC) புதிய அரசமைப்புக்கான முன்மொழிவுகளை உருவாக்க நியமித்தார். நிபுணர்கள் குழுவையும் நியமித்தார். அதன் தொடக்க கூட்டத்தில் அவர் கூறியதாவது:

''பண்டாரநாயக்கா-செல்வநாயகம் உடன்படிக்கையில் இருந்து கடந்த கால முயற்சிகளை நாம் ஆராய வேண்டும்... அவர்களது சொந்தபிரதேசங்களில்உள்ள மக்கள் தமது தலைவிதியை பொறுப்பேற்க வேண்டும் அவர்களின் அரசியல்-பொருளாதார சூழலை கட்டுப்படுத்த வேண்டும். விகிதாசாரமற்ற வகையில் வளங்களை ஒதுக்கீடுசெய்து கொழும்பு முடிவெடுப்பது ஒரு பிரச்சினையாக இருந்து வருகிறது. கூடுதலாக, அதிகாரப்பகிர்வு என்பது அடையாளம் மற்றும் பாதுகாப்பு மற்றும் சமூக-பொருளாதார முன்னேற்றம் தொடர்பானபிரச்சினைகளை, மத்திய அரசின் மீது அதிக நம்பிக்கை இல்லாமல் தீர்க்க வேண்டும் என்பதும் அசாத்தியமானது. இது சம்பந்தமாக, பிராந்திய சிறுபான்மையினரின் கேள்விக்கு தீர்வு காண்பதும் முக்கியமானது... நமது உடனடி அண்டை நாடான இந்தியா உட்பட , புதிய அரசமைப்புக் கட்டமைப்பை உருவாக் கும்போது நாம் படிக்கக்கூடிய பல எடுத்துக்காட்டுகள் உலகம் முழுவதிலும் உள்ளன.

‘எந்தவொரு தீர்வும் மோதலின் பின்னணியைக் கருத்தில் கொண்டு நாட்டின் இறையாண்மையை தியாகம் செய்யாமல் அதிகபட்ச அதிகாரப் பகிர்வு வரை நீட்டிக்கப்பட வேண்டும்.‘

அனைத்துக் கட்சித் தெரிவுக் குழு செயல்முறையில் ஈடுபட்டுள்ள பல இன வல்லுநர் குழு, அவர்களின் முக்கியஅறிக்கையில்,ஒகஸ்ட் 2000 முன்வைத்தனர். ஒரு விரிவான அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டைமுன்மொழிந்தது. அந்த இறுதி அறிக்கை. இதற்கிடையில், 13ஆவது திருத்தச் சட்டத்தை ஒருங்கு நிரல் உள்ளிட்டவற்றை ஒழிப்பதுஉட்படமுக்கியமான முன்னேற்றங்களை பரிந்துரைகளை முன்வைத்தது.

ஐந்தாவதாக, 2015 ஆம் ஆண்டு பிரதமர் தலைமையில் அரசமைப்பு சீர்திருத்த செயல்முறை மேற்கொள்ளப்பட்டது, இது இரண்டாவது இடைக்கால அறிக்கையுடன் நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்ட அரசமைப்பு வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் உச்சக்கட்டத்தை எட்டியது. இது ஒற்றையாட்சி கட்டமைப்பில் இருந்து மேலும் விலகி, நிலம் மற்றும் காவல்துறை உள்ளிட்ட முக்கியமான பகுதிகளில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை உள்ளடக்கியது.

மேற்கூறியவற்றுக்கு மேலதிகமாக, 2009 இல் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை அடைவதற்கு 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவும் கட்டியெழுப்பவும் ஆட்சியாளர்கள் சில உறுதிமொழிகளை வழங்கினர்..

ஜூன் 2010 இல், இந்தியாவின் முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், இலங்கை தொடர்பாக பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்:

''13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுப் பொதி, நீடித்த அரசியல் தீர்வுக்கு தேவையான நிலைமைகளை உருவாக்கும் என்று பிரதமர் வலியுறுத்தினார். இலங்கையின் அனைத்து மக்களும் சமாதானம், நீதி மற்றும் கௌரவமான சூழ்நிலையில் தமது வாழ்க்கையைநடத்துவதற்கு தேவை யான நிலைமைகளை உருவாக்குவதற்கு ஊக்கியாக செயற்படும் அனைத்து சமூகங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை உருவாக்குவதற்கானதனதுஉறுதியை இலங்கை ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்தினார். ஜனநாயகம், பன்மைத்துவம், சம வாய்ப்பு மற்றும் மனித உரிமைகளுக்கானமரியாதை ஆகியவற்றுடன் ஒத்துப்போகிறது. இந்த நோக்கத்திற்காக, அதிகா ரமளிப்பதன் ஊடாக தேசியநல்லிணக்கம்மற்றும் நல்லிணக்கத்தைவலுப்படுத்த வடிவமைக்கப்பட்ட அரசமைப்பின் பொருத்தமான ஏற்பாடுகளைதொடர்ந்துநடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி தனது தீர்மானத்தை வெளிப்படுத்தினார். இந்நிலையில், சம்பந்தப்பட்ட அனைத்துத்தரப்பினருடனும் விரிவான பேச்சு நடத்துவது குறித்து அவர் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களுக்கிடையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு இந்தியாவின் ஆக்கபூர்வமான ஆதரவை இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.''

மே 2011 இல் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் புதுடில்லிக்கு விஜயம் செய்தபோது இந்த உறுதிமொழி மீண்டும் மீண்டும் தரப்பட்டது. இந்திய வெளியுறவுத் துறை அமைச்சருடன் இணைந்து வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

''... இலங்கை ஆட்சியாளர்களுக்கும்தமிழ் கட்சிகளின்பிரதிநிதிகளுக்கும் இடையில்நடைபெற்றுவரும் பேச்சு விரைவான மற்றும் உறுதியானமுன்னேற்றத்தை உறுதிசெய்வதற்கானதனது உறுதிப்பாட்டை இலங்கையின்வெளிவிவகாரஅமைச்சர் உறுதிப்படுத்தினார்.13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும்அதிகாரப் பகிர்வு பொதி, அத்தகைய நல்லிணக்கத்திற்கு தேவையான நிலைமைகளை உருவாக்குவதற்கு பங்களிக்கும்.''

இந்தஉறுதிமொழி2012 ஜனவரியில் கொழும்பில் மீண்டும் ஒருமுறை வலியுறுத்தப்பட்டது. ஜனாதிபதி ராஜபக் ஷவைச் சந்தித்த பின்னர், இந்திய வெளிவிவகார அமைச்சர் கௌரவ. அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் இணைந்து ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே எஸ்.எம்.கிருஷ்ணாஇவ்வாறு தெரிவித்தார்.

“இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதன்அடிப்படையிலும், அதன் மீது கட்டியெழுப்புவதன் மூலமும், அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை அடையும் வகையில், அரசியல் தீர்வை நோக்கிச் செல்வதற்கான அதன் உறுதிப்பாட்டை இலங்கை அரசு பல சந்தர்ப்பங்களில் எமக்கு தெரிவித்திருக்கிறது. உரையாடல் செயல்முறைக்குவிரைவான மற்றும் ஆக்கபூர்வமான அணுகுமுறையை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.''

மார்ச்13, 2015 அன்று, இலங்கைநாடாளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

’இன்று, இந்தியாவில் உள்ளமாநிலங்களைவலிமையானதாக மாற்றுவதே எனது முதன்மையான முன்னுரிமை. நான் கூட்டுறவு கூட்டாட்சியில் உறுதியான நம்பிக்கை கொண்டவன். எனவே, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் மற்றும் வளங்களை பகிர்ந்தளிக்கிறோம். தேசிய முடிவெடுக்கும் செயல்பாட்டில் நாங்கள் அவர்களை முறையான பங்காளிகளாக ஆக்குகிறோம்.''

2019நவம்பர்29அன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் இந்திய விஜயத்தின் போது, பிரதமர் நரேந்திரமோடிபின்வருமாறு கூறினார்:

''இலங்கையில் நல்லிணக்கம் தொடர்பிலும் நாங்கள் வெளிப்படையாக கருத்துக்களை பரிமாறிக் கொண்டோம். ஜனாதிபதி ராஜபக்ஷஇனநல்லிணக்கம் பற்றிய தனது அரசியல் கண்ணோட்டத்தை என்னிடம் கூறினார். சமத்துவம், நீதி, சமாதானம் மற்றும் மரியாதைக்கான தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில், நல்லிணக்கச் செயற்பாட்டை இலங்கை அரசு முன்னெடுத்துச் செல்லும் என்று நான் நம்புகிறேன். 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதும் இதில் அடங்கும். வடக்கு மற்றும் கிழக்கு உட்பட இலங்கை முழுவதிலும் உள்ள அபிவிருத்திக்கான நம்பகமான பங்காளியாக இந்தியா மாறும்.''

மேற்கூறிய அனைத்திலிருந்தும், அரசமைப்பின் 13வது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக இலங்கை அரச பல சந்தர்ப்பங்களில்உறுதியளித்துள்ளது என்பது தெளிவாகிறது. ஆனால் அத்துடன் நிற்கவில்லை. ‘அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை அடைவதற்காக 13ஆவது திருத்தத்தின் மீது கட்டியெழுப்ப'என்றமிகவும்குறிப்பிட்ட உறுதிமொழியும் இந்த வாக்குறுதியில் அடங்கியுள்ளது.

எமது வரலாற்றுச் சிறப்புமிக்கவாழ்விடங்களில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி கட்டமைப்பின் அடிப்படையிலான அரசியல் தீர்வை நோக்கிச் செயற்படுவதற்கு வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் மக்களிடமிருந்து பலமுறை நாம் ஆணையைப்பெற்றுள்ளோம். அரசமைப்புச் சீர்திருத்தத்திற்கான எங்கள் முன்மொழிவாக இதை நாங்கள்தொடர்ந்துவைத்துள்ளோம்.

இந்தப் பின்னணியில், கூட்டாட்சிக் கட்டமைப்பில் எங்களின் நிலைப்பாட்டில் சமரசம்செய்துகொள்ளாமல், அரசமைப்பில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் விரைவாக அமுல்படுத்தவும், நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலை நடத்தி,மேலேகூறப்பட்டதமிழ் மக்களின் அபிலாஷைகளின் அடிப்படையில் தமிழ்த் தேசியப்பிரச்சினைக்குதீர்வு காணும் நடவடிக்கையை எடுக்கவும் ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறோம் - என்றுள்ளது.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்களுக்கு எதிரான மேர்வின் சில்வாவின் கருத்துக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## சமூக ஊடகங்களில் சீற்றம்



வடக்கு கிழக்கில் விகாரைகளுக்கு தடை விதிக்கப்பட்டால் அங்குள்ளவர்களின் தலைகளுடன்தான் நான் வருவேன் என்று தமிழர்களுக்கு எதிராக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ள கருத்துக்குச் சமூக ஊடகங்களில் கடும் கண்டனங்கள்வெளியாகியுள்ளன.

முன்னாள் அமைச்சர் உரையாற்றும் வீடியோ ஊடகமொன்றின் செய்தியில் வெளியாகியுள்ளது.

விகாரைகள் மீது கைவைத்தால் வடக்கு கிழக்கில் உள்ளவர்களின் தலைகளை களனிக்கு கொண்டுவருவேன் என அதில் மேர்வின் சில்வாதெரிவிப்பதைக் காணமுடிகின்றது.

மேர்வின் சில்வாவின் இந்தக் கருத்துக்காக அவருக்கு எதிராக ஐசிசிபிஆர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியாதா என சமூக ஊடக பயனாளர் ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அரசாங்கம்நகைச்சுவை கலைஞர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றது தேசிய கீதத்தை தவறாக பாடியவர்களை விமர்சிக்கின்றது இங்கு முன்னாள் அமைச்சர் தமிழர்களின் தலைகளை துண்டிப்பேன் என வெளிப்படையாக தெரிவிக்கின்றார் இவருக்கு எதிராக நடவடிக்கை இல்லையா என மற்றுமொரு சமூக ஊடக பயனாளர் பதிவிட்டுள்ளார்.

(05)

# இலங்கை அரசியலில் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியே மேர்வின் சில்வா

## அனந்தி சசிதரன் கடும் காட்டம்



இலங்கை அரசியலில் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாகவே மேர்வின் சில்வா காணப்படுகின்றார் என வடக்கு மாகாண சபையின் முன்னாள்அமைச்சர்அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

நான்வடக்கு, கிழக்குக்கு வருவேன், நீங்கள் (வடக்கு, கிழக்கில் உள்ளவர்கள்) விகாரைகளை தடுக்க முற்பட்டால், மகாசங்கத்தினர்மீது கைவைக்கமுயன்றால்நான் களனிக்கு சும்மாதிரும்பிவர மாட்டேன், உங்களின் (வடக்கு, கிழக்கில் உள்ளவர்கள்) தலைகளைகையில் சுமந்து கொண்டுதான் களனிக்கு வருவேன். - என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசியலில் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாகவே மேர்வின் சில்வா காணப்படுகின்றார். ஊடக நிறுவனத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியமை, அரச ஊழியரை மரத்தில் கட்டிவைத்து தாக்கியமை,முன்னேஸ்வரம் ஆலயத்துக்குள் புகுந்து வேள்வி பூஜையை தடுத்து நிறுத்தியமை என அவரின் அடாவடி செயற்பாடுகளை பட்டியலிடலாம்.

ராஜபக்ஷக்களின் விசுவாசியாக அவர்களின் அமை ச்சரவையில் இடம் பெற்றிருந்த மேர்வின் சில்வா, 2015 ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த பின்னர் பொதுத் தேர்தலில் போட்டியிட எந்தவொரு கட்சியும் இடமளிக்கவில்லை. இதனால் அரசியல் ரீதியில்ஓரங்கட்டப்பட்டார். பின்னர் தனது மகனுடன் இணைந்து மக்கள் சேவை எனும் கட்சியையும் ஆரம்பித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார். பொதுத் தேர்தலில் அநுராதபுரம் மாவட்டத்தில்களமிறங்கினார். அதன்பின்னர் சுதந்திரக்கட்சி பக்கம் தாவினார். தற்போது எந்த கட்சி என தெரியவில்லை.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளை அம்மையார் இலங்கை வந்திருந்த போது, அவருக்கு திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என மிக கேவலமாகப் பேசி தன் நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்தியவர்.

இறுதியில் அது மேர்வினின் தனிப்பட்ட கருத்து எனக்கூறி மஹிந்த அரசுக்கு அப்போது மன்னிப்பு கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மேர்வினின் இந்த உரையை அவரின் கருத்து சுதந்திரம் எனக்கூறி நியாயப்படுத்திவிட முடியாது. இது இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை உருவாக்கும் கருத்தாகவே அமைந்துள்ளதாக குறிப்பிடப் பட்டுள்ளது. -என்றுள்ளது. (05)

# க.பொ.த. சாதாரண தர பரீட்சையை தரம் 10 இல் நடத்த நடவடிக்கையாம்

கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையை 10 ஆம் தரத்தில் நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்தி இருக்கிறோம்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தற்போது அது தொடர்பில் கலந்துரையாடி வருகின்றோம் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

எதிவரும்காலங்களில்மேற்கொள்ள இருக்கும் கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைதொடர்பாககுறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

நிகழ்காலத்துக்கு ஏற்றவகையில் கல்வித்துறைஷயில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

தற்போது இருக்கும் கல்வி நடவடிக்கைகள் நவீன தொழிநுட்பத்துக்கு ஏற்றவகையிலும். தொழில்சார் கல்வியை மாணவர்களுக்கு வழங்கும் வகையில் இதில் மாற்றங்களைச் செய்ய இருக்கிறோம்.

அதன் பிரகாரம் பாடசாலைகளில் இடம்பெறும் தவணைப்பரீட்சைகளை இல்லாமலாக்கி, வருட இறுதியில் பரீட்சை நடத்தவும் மாணவர்ளின் செயற்திறமைகள், பாடசாலைக்கான வருகை போன்ற விடயங்களையும் கணிப்பிட்டு இறுதிப்பரீட்சை பெறுபேறுடன் ,சேர்ப்பது தொடர்பாக ஆராய்ந்து வருகிறோம்.

அத்துடன் கல்வி பொதுத் தராதர சாதாரண பரீட்சையை 10ஆம் தரத்தில் நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்தி இருக்கிறோம்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தற்போது அது தொடர்பில் கலந்துரையாடி வருகின்றோம். சாதாரண தர பரீட்சை ஆரம்ப காலத்தில் 10ஆம் தரத்திலேயே இடம்பெற்றது.

பிற்காலத்தில் அது 11ஆம் தரம் வரை ஒரு வருடத்தால் முன்னுக்கு கொண்டு செல்லப்பட்டது.

கல்வி மறுசீரமைப்பின் கீழ் 10 ஆம் தரத்தில் சாதாரண தர பரீட்சையை நடத்த முடியுமா சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி வருகிறோம்.

புதிய கல்வி மாற்றத்தின் மூலம் உயர் தர பரீட்சைக்குத் தோற்றியதன் பின்னர், மாணவர்கள் தங்களின் எதிர்கால இலக்கை தெரிவுசெய்-துகொள்வதற்கான சுயாதீன நிலையை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையை தயாரித்துக்கொள்ள வேண்டும்;. - என்றார்.

(05)

# அதிகரிக்கும் மரணங்கள் மறைக்கப்படும் மர்மங்கள்

## தெளிவுபடுத்தக் கோருகிறார் சமல் சஞ்சீவ

மூன்று மாதங்களில் சுமார் 10 ஒவ்வாமை மரணங்கள் ஏற்படுவது இயல்பானதா என்பதை சுகாதார அமைச்சு தெளிவுபடுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவமற்றும்சிவில் உரிமைகள் தொடர்பான வைத்தியர்களின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் சமல் சஞ்சீவ இந்த விடயத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர்நாயகம் அசேல குணவர்தன ஆகியோரின் ஆலோசனையின் பேரில் மருந்துப் பாவனையால் நோயாளிகள்உயிரிழந்தமை தொடர்பில் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

குழு நியமித்து 48 மணித்தியாலங்களின் பின்னர் கம்பஹா வைத்தியசாலையில் மற்றுமொரு நோயாளி மரணம் பதிவாகியுள்ளதாக வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

செஃப்டாசிடைம் எனும் சக்தி வாய்ந்த நுண்-ணுயிர் எதிர்ப்பியின் 11 ஆவது ஊசியின் பின்னர் மரணம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதாக அவர் கூறினார். அது ஒரு போதும் சாதாரண நிலைமை அல்ல எனவும் சுகாதார அமைச்சின் உண்மையான பிரச்சினையை மூடி மறைப்பதற்காக வெளியிடும் ஊடக அறிக்கை ஊடாக அமைச்சு மக்களை நகைச்சுவையாக எண்ணியுள்ளார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# கல்வியங்காட்டு கொலை தொடர்பில் 6 பேர் கைது

யாழ்ப்பாணம் – கல்வியங்காடு ஜி.பி.எஸ் விளையாட்டு அரங்க பகுதியில் சனிக்கிழமை நிர்வாண நிலையில் ஆண் ஒருவரின் சடலம் அடிகாயங்களுடன் மீட்கப்பட்ட நிலையில், அவர் கொலை செய்யப்பட டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம்விஷேட குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் கைது நடவடிக்கை இடம் பெற்றுள்ளது. கோப்பாய் மற் றும் சிந்தங்கேணி பிர தேசங்களைச் சேர்ந்த 4 ஆண்களும் 2 பெண்களுமே இவ்வாறு கைது செய்–யப்பட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமி (9வயது) ஒருவரை பாடசாலைக்கு ஏற்றி இறக்கி வரும் நிலையில் குறித்த நபர் சிறுமியுடன் தவறாக நடந்தார் என்று சிறுமி தனது தாயாருக்கு தெரிவித்திருந்தார்.இந்நிலையில், குறித்த தகவலை தாயார் சித்தங்கேணியில் உள்ள சிறுமியின் மாமனுக்கு தெரிவித்திருந்த நிலையில்,அவர் கோப்பாய் வந்து குறித்த நபரை சிந்தங்கேணி அழைத்துச் சென்று அங்கு வைத்து தாக்கியுள்ளனர் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.


பின் அந்த நபரை கோப்பாய் கொண்டுவந்து அவரது இல்லத்தில் விட்டுள்ளனர். அவ்வாறு வீட்டில் விடப்பட்ட நிலையில் அவர் நிர்வாண நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபரின் உடலில் அடிகாயங்கள் காணப்பட்ட பொழுதும் உயிர் பிரியக் கூடிய வகையில் காயங்கள் பாரதூரமானவையாக இல்லை எனவும், குறித்த நபர் ஏற்கனவே இருதய நோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் மாரடைப்பால் உயிரிழந்திருக்கலாம் எனவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

(05)





# அகிம்சையால் பாரதத் தாய் அடைந்திட்டாள் சுதந்திரத்தை !









இன்னுயிரைப் பலர் ஈந்தார்
ஈன்ற மண்ணை மீட்பதற்கு
பல் கொடுமை அனுபவித்தார்
பாரதத்தாய் துயர் களைய
காந்தியெனும் மகான் வந்தார்
கை பிடித்தார் அனைவரையும்
சாந்தி சாந்தி என்று
சத்தியத்தை தூக்கி நின்றார் !

கொள்ளை கொண்ட வெள்ளையர்
குமுறி கனல் கொப்பளித்தார்
வெள்ளமாய் குருதி மண்ணில்
பெருகுவிட வழி சமைத்தார்
ஈரமின்றி உயிர் பறித்தார்
இரக்கமதை மறந்து நின்றார்
பாரத்தாய் துயர் அறியா
பாதகராய் மாறி நின்றார்

படைபலத்தைக் கொண்டு நின்றார்
பணபலத்தைப் பெருக்கி நின்றார்
பாதகர்கள் பல பேரை
பக்கபலம் ஆக்கி நின்றார்
பாரதத்தாய் படு துயரை
பரிகாசம் செய்து நின்றார்
கயவர் பலர் கைகோர்த்து
கண்ணியத்தை மறந்து நின்றார்

அடிமை கொண்ட வெள்ளையர்
ஆணவத்தில் அமிழ்ந்து நின்றார்
அசுரராய் உரு மாறி
அழித் தொழித்து மகிழ்ந்தார்
அவர் முன்னே வந்தார்
அகிம்சையை கை எடுத்தார்
ஆள வந்த வெள்ளையரை
ஆட அவர் செய்திட்டார்

ஆண்டவனின் அருள் பெற்ற
அவரே நம்மண்ணல் காந்தி
ஊதி விட்டால் பறந்திடுவார்
உலர்ந்த உடல் கொண்டவவர்
ஆன்மீக பலம் மிக்கார்
அகிம்சையினைத் துணை கொண்டார்
பலங் கொண்ட வெள்ளையை
பாரதம் விட்டோடச் செய்தார்

ஏறி நின்ற வெள்ளயரை
ஏற்றி விட்டார் கப்பலிலே
மாறி அவர் மனமாற
வைத்திட்டார் காந்தி மகான்
ஆகஸ்டு பதின் ஐந்தில்
அனைவருமே வியப் படைந்தார்
அகிம்சையால் பாரதத் தாய்
அடைந் திட்டாள் சுதந்திரத்தை

பாடினார் ஆடினார் பரவசமாயினார்
கூடினார் கொடி ஏற்றினார்
கொண்டாடி மகிழ் வெய்தினார்
அடிமை இருள் அகன்றது
ஆதவன் ஒளி பரப்பினான்
காந்தி எனும் சக்தியால்
கண்டு விட்டார் சுதந்திரத்தை

பெற்று விட்ட சுதந்திரத்தை
பேணி விடல் முக்கியமே
காந்தி கண்ட சமுதாயம்
குலைந்து விட செய்யாதீர்
கிடைத் திட்ட சுதந்திரத்தை
மதித்துமே போற்ற வேண்டும்
ஆணவத்தில் ஏறி நின்று
அதை மதிக்க மறக்காதீர்





மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# நாடகத்திற்கு முடிவுரை

நாட்டு மக்கள் தற்போது அதிகாரப் பரவலாக்கலை எதிர்பார்க்கவில்லையென ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன தெரிவித்திருக்கிறது. கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் நேற்றுச் செய்தியாளர்களிடம் இந்தக் கருத்தைத் வலியுறுத்தியிருக்கிறார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பாகவே அவர் இதனைத் தெரிவித்தார். ஜனாதிபதி அதிகாரத்தை பரவலாக்குவது தொடர்பான விடயத்தை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு, பிரதான பிரச்சினையான பொருளாதாரத்தை கட்டியெழுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதிகாரப்பரவலாக்கல் யோசனை தற்போதைய சந்தர்ப்பத்தில் அவசியமற்றதொன்றாகும். ஆகவே அதனுடன் தொடர்புடைய விடயங்களை மறந்து விடுமாறு ஜனாதிபதியிடம் கோருகிறோம். பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் விடயத்தை மக்கள் ஜனாதிபதியிடம் இருந்து எதிர்பார்க்கின்றனர்.

நாடு இன்னும் வங்குரோத்து நிலைமையில் இருந்து மீளாத நிலைமையின் கீழ் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது அந்தளவுக்கு உகந்த விடயமாக நாங்கள் கருதவில்லை.

நாடு வீழ்ச்சியடைந்துள்ள சந்தர்ப்பத்தில், நாட்டை உறுதிப்பாடற்ற நிலைமைக்குள் தள்ள வெளிநாட்டு சக்திகள், பல்வேறு அரசசார்பற்ற அமைப்புகள் முயற்சித்து வருகின்றன. பொருளாதார உறுதிப்பாடற்ற நாட்டுக்குள் பல்வேறு விடயங்கள் பற்றி பேசி மறைமுகமாக ஆதாயம் தேட முயற்சிக்கும் சிலரும் இருக்கின்றனர்.

இவ்வாறெல்லாம் அவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். 13 குறித்து இப்போது பேசத் தேவையில்லை என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு. அதுவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நிலைப்பாடும் என்று அவர் இதற்கு முன்னரும் தெரிவித்திருந்தார். அதாவது, 13ஐ நடைமுறைப்படுத்தப் போவதாகவும் அதனை நாடாளுமன்றமே முடிவு செய்யவேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க எடுத்த முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது என்பதையே பெரமுனவின் கருத்து வெளிப்படுத்துகின்றது.

நாடாளுமன்றத்தில் ரணிலுக்கு பெரமுனதான் ஆதரவு. அதன் தயவின்றி ரணிலால் நாடாளுமன்றத்தில் துரும்பைக்கூட அசைக்க முடியாது. அப்படி இருக்கும்போது 13 இப்போதைக்குத் தேவையில்லை என்று அந்தக் கட்சி முடிவெடுத்து விட்டதென்றால் நாடாளுமன்றத்தில் அது தொடர்பில் ரணிலால் எந்தவொரு நகர்வையும் மேற்கொள்ள முடியாது. ஆக மொத்தத்தில் இந்தப் பிரச்சினை இத்துடன் மூடப்பட்டு – முடிக்கப்பட்டு – விட்டது என்றே கொள்ளலாம்.

ரணிலுக்கும் அதுதான் வேண்டியிருந்தது. ஆனால் பழியை யார் மீதாவது போடவேண்டுமே என்று தேடிக்கொண்டிருந்தார். இப்போது பெரமுன கிடைத்திருக்கிறது. இனி தான் முயற்சித்தபோதும் பெரமுனதான் தடுத்தது என்று தமிழ் மக்களிடம் சொல்லிக்கொண்டு வாக்குக் கேட்பார். 13ஐ நடைமுறைப்படுத்தாத 8ஆவது அரசுத் தலைவர் என்று காட்டிக்கொண்டு சிங்கள மக்களிடம் வாக்குக் கேட்பார். மொத்தத்தில் மீண்டும் ஒரு தடவை 13, அனைத்துக் கட்சிக் கூட்டம், நாடாளுமன்றம் என்று இதுவரை போடப்பட்டு வந்த நாடகம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது.

நாடாளுமன்றத்தில் தன்னை ஆதரித்து அதிகாரத்தில் இருத்தி வைத்திருக்கும் கட்சியுடனேயே இது விடயத்தில் பேசி ஒரு முடிவுக்கு – தீர்க்கமான இணக்கத்திற்கு – வராமல் 13ஐ நாடைமுறைப்படுத்துகின்றேன் என்று ரணில் காலடி எடுத்து வைத்ததே மகா தவறு. மகிந்தவுக்கும் அவரது கட்சிக்கும் தமிழர்கள் விடயத்தில் வாக்குறுதிகளைப் பேணும் மரபு என்றொன்று கிடையாது என்பதும் ரணிலுக்குத் தெரியாததல்ல, அப்படியிருந்தும் நாடாளுமன்றத்தில் 13 பிளஸ்க்கு தான் இணங்குகிறார் என்று மகிந்த சொன்னதை நம்பி ரணில் இந்தக் காரியத்தில் இறங்கியிருந்தால் அது மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கிய கதைதான்.

இப்போது எல்லாவற்றுக்கும் முடிவுரை எழுதப்பட்டாயிற்று. ஆவணி 17 மீண்டும் ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்த ரணில் திட்டமிட்டிருந்தார். அதற்கு இனி அவசியம் இருக்காது. பெரமுனவின் ஆதரவின்றி நாடாளுமன்றத்தில் 13 தொடர்பான எந்தவொரு சட்டத்தையும் இயற்ற முடியாது என்கிறபோது மற்றைய கட்சிகளின் தலைவர்களுடன் இது குறித்துப் பேசுவதில் என்ன பயன்? எனவே இந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்துள்ள நிலையில் மாகாண சபைகளுக்கு உடனடியாகத் தேர்தலை நடத்தி அவற்றை மக்கள் பிரதிநிதிகளிடம் கையளிப்பதுதான் ரணிலால் செய்யக்கூடிய காரியம். அவர் அதனை உடனே செய்யவேண்டும்.

# கற்பகதரு எனும் அற்புதம்

## ஏடு தத்திட்ட எங்கள் பனை

அங்கம் – 9



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

காகிதங்கள் பயன்பாட்டுக்கு வராது இருந்த காலத்திலும் - பலவகையில் நூல்கள் வெளிவந்திருக்கின்றன. என்ன ஆச்சரியமாய் இருக்கிறதா! ஆச்சரியப்படவே தேவை இல்லை! வெளிவந்த பல்துறை சார்ந்த நூல்களுமே கற்பகதருவாம் பனையின் ஓலையில் எழுதப்பட்டே வந்திருக்கின்றன என்பது தான் முக்கியமாகும். எங்களின் எழுத்தறிவினைச் சுமந்த பனை ஓலைச் சுவடிகள் அறிவின் சின்னம் என்பதில் பெருமை அல்லவா! ஏடு என்றாலே பனைதான் எல்லோர் கண்முன்னே வந்து நிற்கும். ஏடு என்ற சொல்லின் வேரே பனை ஓலை அல்லவா !

பனை ஓலை அரசாங்கத்தின் எழுதுகின்ற பொருளாகப் பயன்பாட்டில் இருந்திருக்கிறது. காகிதம் பயன்பாட்டுக்கு வரமுன்னர் எழுதுவதற்கு எங்களுக்குக் கைகொடுத்த தெய்வமாய் பனையும் அதன் கொடை யான ஓலைகளுமே விளங்கின என்பதை கருத்திருத்தல் மிகவும் அவசியமாகும்,

பனை ஓலைச்சுவடிகள் பலவற்றை எங்களின் முன்னோர்கள் பலர் தேடிக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இன்றும் ஓலைச் சுவடிகளைத் தேடும் பணியில் பலர் ஆர்வத்துடன் ஈடுபட்டும் வருகிறார்கள். பனை ஓலைச் சுவடிகளைத் தேடி உ.வே. சா என்னும் எங்கள் தமிழ்த் தாத்தா நெடும்பயணம் மேற் கொண்டார் என்பதை யாவரும் அறிவோம். அவரின் வழியில் இன்று பலரும் பயணப்பட்டு பல பனை ஓலை ஏட்டு ச் சுவடிகளைப் பல இடங்களிலும் கண்டு தேடிப் பெற்றிருக்கிறார்கள் . ஓலைச் சுவடிகளை வீட்டின் கூரையில் வைத்திருந்திருந்திருக்கிறார்கள். ஓலைச் சுவடிகளைத் தேடிப் போனவர்கள் - வீட்டுக்குரியவர் கூரையில் சொருகி வைக்கப்பட்ட ஓலைச் சுவடிகளை - அவர்களிடமிருந்து பெற்ற வரலாறுகளையும் அறிந்திடக் கூடியதாக இருக்கிறது.

கேரள மாநிலத்தில் ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து ஐந்தாம் ஆண்டு வரையிலும் பத்திரப்பதிவு என்பது ஓலையில்த்தான் அமைந்திருந்தது . தீட்டு என்னும் பெயரால் இந்த எழுதப்பட்ட ஆவணங்கள் அழைக்கப்பட்டன. ஓலைச் சுவடிகளைத் தொகுத்து வைத்த தொகுப்பினை கருணை என்று பெயரிட்டு அழைத்தனர். ஓலைகளில் எழுதும் எழுத்துக்களை கேரளத்தில் - கோலெழுத்து, கண்ணெழுத்து என்று பெயரிட்டு அழைத்திருக்கிறார்கள்.

செட்டி நாட்டு வணிகர்கள் தங்களின் கணக்குகளை எழுதுவதற்கு ஓலைச் சுவடிகளையே பயன்படுத்தி இருக்கிறார்கள். தம்மபதம் என்னும் பௌத்த நூல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஓலைச் சுவடியிலேயே எழுதப்பட்டிருக்கிறது.

திபெத்து நாட்டில் தமிழ் நாட்டின் ஓலைச்சுவடிகள் பல கிடைத்திருக்கின்றன என்று அறிய முடிகிறது, திருவாங்கூர் பகுதியில் பழைய ஓலைச் சுவடிகள் கிடைக்கப்பெற்றிருக்கிறது. அழகிய பாண்டிபுரம் பெரிய வீட்டுச் செட்டியார் ஓலைகள் என்று இந்தப் பழைய ஓலைச் சுவடிகள் அழைக்கப்படுகின்றன.

ஓலைச் சுவடிகள் எங்களின் மிகப்பெரிய பொக்கிஷமாகும். அந்த



ஓலைச் சுவடிகளை அளித்த கற்பக தருவான பனையினை நாங்கள் எக்காலத்தும் மறந்து விடுதல் கூடாது. அப்படி நாங்கள் மறந்து விடுவோமேயானால் நன்றி என்னும் சொல்லையும் மறந்து விட்டவர்களாகி விடுவோம். மருத்துவம் , சோதிடம் சிற்பம், ஓவியம், இலக்கியம், இலக்கணம், கணிதம், நிகண்டு, நாட்டார்வழக்காறுகள், வரலாறு, சமயம், தத்துவம், என்று பல்கிப் பெருகி நிற்கும் அறிவுக் கருவூலங்கள் அனைத்தையும் பனை ஓலை தன்னகத்தில் நிறைத்துக் கொண்டது. பனையின் ஓலைகள் எழுதுவதற்கு ஏற்றனவாய் அமைந்ததுவே பெரும் வரப் பிரசாதம் என்றுதான் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஓலைச் சுவடிகளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்ட அறிஞர்களால் பல இடங்களில் ஓலைச்சுவடிகள் பல கிடைத்திருக்கின்றன. அந்தவகையில் திருநெல்வேலிப் பகுதியில் பல ஓலைச் சுவடிகளை அவர்கள் கண்டெடுத்திருக்கிறார்கள். அண்ணாவிமார் வீடுகளில் நாடகச் சுவடிகளைக் கண்டறிந்திருக்கிறார்கள். அங்குள்ள மருத்து-வர்கள் மருத்துவம் சம்பந்தமான ஓலைச்சுவடிகளை வைத்து அதன்படி மருத்துவம் செய்வதையும் கண்டறிந்திருக்கிறார்கள். சோதிடர்கள், குறிசொல்லும் குறவர்கள், வில்லிசைக் கலைஞர்கள், ஓலைச் சுவடிகளைத் தம்வசம் வைத்திருந்து பாதுகாத்து வருகிறார்கள் என்பதையும் ஓலைச்சுவடி தேடிச் சென்ற வல்லுனர்கள் தெரிவிக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல ஜமீந்தார்கள், பண்ணையார்கள், வீடுகளிலும் பழைய ஓலைச் சுவடிகள் இருப்பதைக் கண் டறிந்திருக்கிறார்கள். கோவில்கள், பலரின் வீடுகளில் உள்ள பூஜை அறைகள் , இங்கெல்லாம் ஓலைச் சுவடிகள் இருப்பதையும் கண்டிருக்கிறார்கள். கேரளப் பல்கலைக்கழகத்தில் உள்ள நூலகத்தில் கன்யாகுமரி , திருநெல்வேலி , இராமநாதபுரம் மதுரை மாவட்டங்களை சேர்ந்த ஓலைச் சுவடிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இச்சுவடிகளில் பெரும்பாலான சுவடிகள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஊர்களில்தான் மிகுதியாக இருப்பதாக அறிய முடிகிறது. கிராமியத் தெய்வங்கள் பற்றிய கதைப்பாடல்கள், வில்லுப்பாட்டுக் கதைகள், கட்ட பொம்மன் கதைகள் அடங்கிய ஓலைச் சுவடுகள் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்,

இலங்கையிலும் பல ஓலைச்சுவடிகள் கிடைத்திருக்கின்றன. அனுராதபுரத்தில் 1,110 வருட பழமைவாய்ந்த ஓலைச்சுவடிகளை கண்டறிந்திருக்கிறார்கள், கேரள மணிகண்டம் என்னும் சோதிடம் பற்றிய ஓலைச் சுவடிகள், அதைவிட - குருநாடி சாத்திரம், அகத்தியர் நாடி சாத்திரம், கிரகச் சக்கர ஞான ஏடு, சித்தாரூடம், ஆதி த்தன் பலன் என்று சோதிடம் சம்பந்தமான சுவடிகளைக் கண்டறிந்திருக்கிறார்கள். அகத்தியர் நூறு, அகத் தியர் வாகடம், அகத்தியர் கற்பம், அகத்தியர் உட்கரு சாத்திரம் , அகத்தியர் சவுக்காரத் திறவுகோல் என்னும் பெயரில் அமைந்த மருத்துவ ஏடுகளும் கண்டறியப்பட்டிருக்கின்றன.



தீக்கிரையாக்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் பழைய நூலகத்தில் ஏறக்குறைய தொண்ணூற்று ஐயாயிரம் ஓலைச்சுவடிகள் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன என்பது கவனத்துக்குரியதாகும், அத்தனை ஓலைச்சுவடிப் பொக்கிஙகளும் அறிவற்றவர்களின் அசுரத்தனத்தால் அக்கினிக்கு இரையாகிவிட்டன என்பதையும் கவலையுடன்தான் மனமிருத்தவேண்டி இருக்கிறது. கற்றறிந்த பெரியோர்களின் வழி காட்டலில் இளையவர்கள் பலர் கை கோர்த்து நூலக நிறுவனம் என்னும் அமைப்பினூடாக பழைய ஓலைச் சுவடிகளைத் தேடி - அவற்றைச் சேகரிப்பதோடு; தக்க முறையில் சுத்தப் படுத்திப் பத்திரப்படுத்தி யாவரும் அறியும் வகையில் (6ஆம் பக்கம் பார்க்க..)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# கற்பகதரு எனும் அற்புதம்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்தில் ஆடிய பாதம் வீதியில் அதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்து செயற்பட்டுவருகின்றபாங்கினையாவரும் மனமெண்ணி பெருமைப்படுவது மிகவும் அவசியம் என்று கருதுகிறேன். இவர்களின்தேடல்கள்வழியில்பலஓலைச் சுவடிகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. ஓலைச்சுவடிகளைத் தேடும் பணியில் ஈடுபட்ட வேளை கந்தபுராண ஓலை சுவடிகளை தெல்லிப்பளை துர்க்கையம்மன்கோவிலில்கண்டதாகவும்அங்கிருந்து அந்த ஓலைச் சுவடிகளைப் பெற்றுக் கொண்டதாகவும் அறிய முடிகிறது.

இலங்கையில் சுவடிகளுக்கென்று கி.மு. முதலாம் நூற்றாண்டிலேயே நூலகம் இருந்ததை அறியமுடிகிறது. பௌத்த விகாரைகள் ஓலைச் சுவடிகளைப் பாதுகாக்கும் இடங்களாக இருந்திருக்கின்றன. ஆரம் பகால நூலகங்கள் இன்று பல்கலைக்கழகங்களில் இருப்பதுபோல சிறப்பாகஇருந்திருக்கின்றனஎன்றும்அறிய முடிகிறது.பதின்மூன்றாம் நூற்றாண்டில் சரஸ்வதி மகாலயம் என்னும்பெயரில்ஒரு நூலகம்யாழ்ப்பாணத்தில்சிறப்பாகஇயங்கி இருக்கிறது என்பதையும் வரலாற்றால் அறிந்து கொள்ளுகிறோம். இங்கு பல ஓலைச்சுவடிகள் வைக்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.இந்த நூலகம் அமைந்த இடம்எதுஎன்றுஅறியஆவலாய் இருக்கிறதல்லவா ? அந்த இடம் தான் நாயன்மார்க்கட்டாகும்.

இன்னுமொரு சிறந்த சுவடிகள் நூலகமும் யாழ்ப்பாணத்தில் இருந்திருக்கிறது. எங்கு தெரியுமா ? மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆதீனத்தில் தான்.பல துறைகள் சார்ந்த ஓலைச் சுவடிகள் இங்கு இருந்தன என்றும் அறிகின்றோம்.பேராதனைப் பல்கலைக்கழகம் இலங்கையின் புகழ்பூத்த பல்கலைக்கழகமாகும். சுவாமி விபுலானந்த அடிகளாரை தமிழ்த்துறைத் தலைவராய்,பேராசிரியராய் ,அமர்த்திப் பெருமைகொள்ளவைத்தபல்கலைக்கழகமாகும். இங்கு மிகவும் சிறந்த நூல் நிலையம்அமையப்பெற்றிருக்கிறது.அந்த நூல்நிலையத்தின் அடித்தளத்தில் உள்ள ஒரு தனி அறையில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட பல அரிய ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பது கருத்திருத்த வேண்டிய செய்தி என லாம். மட்டக்களப்பு மான்மியம் என்னும் சிறந்த ஒரு நூலை ஆக்கியவர் வித்துவான் எவ்.எக்ஸ்.சி . நடராசன் அவர்கள். அந்த நூலினைஆக்குவதற்குஅருந்துணையாக அமைந்தன பழைய ஓலைச் சுவடிகளே என்றுஅவர்தனதுநூலின்முன்னுரையில் காட்டுவதும் நோக்கத்தக்கது. கிழக்கு மாகாணத்தில்கண்ணகிஅம்மன்வழிபாடு மிகவும்பக்திபூர்வமாக இன்றும் மக்களால் பேணப்பட்டு வருகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தைவிட – கிழக்கு இலங்கையில் கண்ணகி வழிபாடு சிறப்பாக இருக்கிறது என்பது குறிப்பிடப் பட வேண்டிய முக்கிய செய்தி எனலாம். வைகாசி மாதத்தில் அம்மனுக்கு பல விசேடங்கள் நடைபெறும் . அதில் ஒன்று கொம்புமுறித்தல் என்பதாகும். குளித்திப்பாடல்களும்பக்தியுடன்பாடப்படும். கண்ணகை அம்மன் கோவில் களில் பெரிய பெட்டகம் இருப்பதைக் கண்டிருக்கிறேன். அந்தப்பெட்டகத்துள்பழைய ஓலைச்சுவடிகள்நிறையவேஇருந்ததையும் நான் கண்டிருக்கிறேன். சித்திர புத்திரன் கதையினை ஏடுகளில் வைத்து அந்த ஏடுகள் வைப்பதற்கான பிணைச்சல் வடிவில் அமைந்த பலகையில் வைத்து கோவில்களில் பாடுவதையும் நான் பார்த்திருக்கிறேன். அந்தக் கதைகளையும் அதற்கான விளக்கங்களையும் என்னுடைய இளமைக் காலத்தில் கேட்டும் இருக்கிறேன்.மாந்திரீக ஏடுகள், பில்லி சூனிய ஏடுகள், மருத்துவ ஏடுகள்,சாதகம் எழுதப்பட்ட ஏடுகள், என்று பலவகைப்பட்ட ஓலைச் சுவடிகளை பலரின் வீடுகளில் நான் கண்டிருக்கிறேன். பனங்காடு என்னும் பெயருடையகிராமத்துக்குஅயல்கிராமத்தில் வாழ்ந்தும் இருக்கிறேன். பனம்பழத்தை சுவைத்தநினைவுகள்இன்றும்என்மனத்தில் பசுமையாய் இருக்கிறது.பனம்பழம் பற்றிய பகுதி வரும்வேளை அதனைப்பற்றி விவரமாய் பார்ப்போம்.

ஓலைச்சுவடிகள்பல இன்னும்பலரிடம் முடங்கிப் போய் இருக்கின்றன என்று ஆராய்வாளர்கள் தெரிவி க்கிறார்கள். அவற்றையெல்லாம்சேகரித்தால் இன்னும் பல அரிய தகவல்களை எல்லாம் அறிந்திடவும் பயன்பெறவும் இயலும் அல்லவா ! ஹாரிங்டன் என்னும் வெள்ளைக்காரர் மதுரை மாவட்டத்தின் ஆட்சியராய் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கடமையாற்றி இருககறார். அவருக்குச் சமையல் செய்தவர் பெயர் கந்தப்பன். அவர் – தான் வேலைபார்த்த அந்த துரையிடம் ஓலைச்சுவடிகள் பற்றி கூறியிருக்கிறார். கிரா மங்களில் உள்ள வீடுகளில் ஓலைச் சுவடிகள் பல இருப்பது வழக்கம். ஆனால் அவர்கள் அதனை வருடத்துக்கு ஒருமுறை தீயில் இட்டு விடுவார்கள். கறையான் அரித்தால் அப்படிச் செய்வார்கள். சில வேளை பயன் அறியாமலும் தீயில் போடுவதும் உண்டு. தீயில் இட்டு எரித்துவிடு என்று என்னிடம் ஒப்ப டைக்கப்பட்ட பல ஓலைச் சுவடிகள் இருக்கின்றன என்று கந்தப்பன் சொன்னதும் – துரை அவற்றைப் பெற்று சென்னை மாகாணத்தின் வருவாய்த்துறைக்கு பொறுப்பாய் இருந்த எல்லீஸர் என்பவரிடம் ஒப்படைத்தார். எல்லீஸரிடம் ஒப்படைக்கப்பட்ட ஓலைச்சுவடிகளில் திருக்குறள் ஓலைச்சுவடியும் இருந்திருக்கிறது என்பது துதான்.

முக்கியமாகும்.எல்லீஸ் என்பவர் தமிழின் மீது கொண்ட காதலால் தமிழைக் கற்று கவிதை எழுதும் அளவுக்கு ஆளுமை உடையவராக விளங்கினார். திருக்குறளை ஆங்கிலத்திலும்மொழிபெயர்த்திருக்கிறார். தமது காலத்தில் தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவிதமக்குக்கிடைத்தஓலைச்சுவடிகளை அச்சு வாகனம் ஏற்றினார் என்றும் அறிந்து கொள்ள முடிகிறது.

ஓலைச்சுவடிகள் பல பல இடங்களில் இன்னுமே இருந்தாலும் அவற்றை எல்லாம் சேகரித்துப் பாதுகாக்க வேண்டும் என்னும்எண்ணம்இப்பொழுதுமேலோங்கி வருவது நல்லதொரு நிலை என்றுதான் கருதல் வேண்டும். ஓலைச் சுவடிகளைப் பாதுகாக்கும் பாங்கில் நூலகங்கள் பல இயங்கிக் கொண்டிருக்கி ன்றன. அந்த வகையில் – சென்னைப்பல்கலைக்கழக கீழ்த்திசைச் சுவடி நூலகம், உ.வே. சா. நூல் நிலையம், பிரமஞான சபை நூலகம், தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை,உலகத் தமிழாராய்சி நிறுவனம், சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம், ஆசியவியல்ஆய்வுநிறுவனம்,- காஞ்சி புரத்தில் காமகோடி பீடம் ரீ சங்கராசாரியார் மடம், பாண்டிச்சேரியில் பிரஞ்சு இந்திய கலைக்கழகம், விருத்தாசலத்தில் குமாரதேவ மடாலயம், தஞ்சையில் – சரஸ்வதி மகால் நூலகம், தமிழ்ப்பல்கலைக்கழகம், தருமபுர ஆதீன மடாலயம் மயிலாடுதுறை, ரீ காசி மடம் திருப்பனந்தாள் , திருவாவடுதுறை ஆதீனம், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் மடம் பேரூர், கலை மகள் கல்வி நிலையம் ஈரோடு, கேரளப் பல்கலைக்கழகம் கீழ்த்திசை சுவடி நிலையம் திருவனந்தபுரம். கள்ளிக் கோட்டை சர்வகலாசாலை. திருச்சூர் சாகித்திய அகாதமி, திருவேங்கடவன் பல் கலைக்கழகம், ஆந்திரப் பல்கலைக்கழகம், உஸ்மானியாப் பல்கலைக்கழகம், தேசிய நூலகம் கொல்கத்தா.




அரசினரின் கீழ் இயங்கும் சென்னை கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் தான் உலகிலே அதிகமான ஓலைச்சுவடிகள் பாதுகாத்துவைக்கப்பட்டிருக்கின்றனஎன்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.இங்கு இருபத்து ஆறு இலட்சம் ஓலைச் சுவடிகளைக் கொண்ட எழுபத்து இரண்டாயிரத்து எழுநூற்று நாற்பத்து எட்டு ஓலைச்சுவடிக் கட்டுகள் இருக்கின்றன என்பது முக்கியமாகும்.

ஓலைச் சுவடிகள் எங்களின் முதுசொம் மாகும். அதனை நாங்கள் அனைவருமே பாதுகாப்பதற்கும், உரியமுறையில்பேணு- வதற்கு இயன்றவரை உதவிடுதல் என்பது மிக மிக அவசியமாகும். கற்பகதருவாம் பனை பற்றி சொல்ல வந்துவிட்டு – ஏடுகளைப் பற்றிய புராணம் பாடுவதாய் எண்ணி விடாதீர்கள். பனை யின் ஓலை இல்லை என்றால் ஏடுகள் என்பதே வந்திருக்கவே முடியாது அல்லவா ? ஓலையில் பொறி க்கப்பட்ட எழுத்துக்கள் அல்லவா எங்கள் முன்னோரின் சிந்தனைகளை எம்மிடம் சேர்த்து நிற்க அருந்துணையாய் அமைந்தது அல்லவா? அப்படி அருந்துணையாய்அமைந்தனவேஓலைச் சுவடிகள். எல்லாவற்றும் பனைதானே காரணம். பனை இல்லையேல் ஓலை வந்திருக்குமா! ஓலை இல்லையே ஏட்டுச் சுவடிகள்தான் வந்திருக்குமா! எனவேதான் பனையின் வரலாற்றில் ஓலைச் சுவடிகள் தொடர்பான வரலா றும் கட்டாயம் இணைக்கபடுதல் இன்றியமையாதது அல்லவா !

விருதுநகரைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியரான எஸ்.யோசப் என்பவர் மிகவும் சிறப்பான ஒரு செயலினைச் செய்திருக்கிறார். ஆயிரத்து முன்னூற்று முப்பது குறட்பாக்களையும் பனை ஓலையில் எழுதிச் சாதனை படைத்திருக்கிறார்.

ஓலையிலும் எழுதலாமா? ஓலை எழுதுவதற்கு உகந்ததா என்று எண்ணுகின்ற இக்காலத்தவர்களுக்கு இந்த ஆசிரியரின் சாதனையானது எங்கள் கற்பகதருவாம் பனையின் மகத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.காகிதம் பயன்பாட்டில் இருக்கும் வேளையிலும் பனை ஓலை எழுதுவதற்கு உகந்ததாய் இருக்கிறது என்பதை இவரின் சாதனை காட்டி நிற்கிறது.

வெண்பா இருகாலில் கல்லானை வெள்ளோலை
கண்பார்க்கக் கையால் எழுதானை – பெண்பாவி
பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாள்
எற்றோமற் றெற்றோமற் றெற்று




OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
conditions apply*
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# இலங்கையின் ஏனைய சமூகத்தினரோடு சரிசமமாக வாழ்வதற்கான போராட்டமே மலையக எழுச்சி பவனி!

## அமெரிக்க தூதுவர் ஜூலி சங் டுவிட்

கடந்த இருவாரங்களாக இடம்பெற்று முடிந்த தலைமன்னார் முதல் மாத்தளை வரையான நடைபவனியானது 200 வருடங்களுக்கு முன்னர் மலையக தோட்டங்களில் வேலை செய்வதற்காக வருகைதந்தவர்களை நினைவுகூருவதாக உள்ளது என்பதை தான் நினைத்துப் பார்ப்பதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

அவர் தனது டுவிட்டர் பக்கத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்த பதிவில் -

இலங்கையின் ஏனைய சமூகத்தினருடன் தாங்களும் சரிசமமாக வாழ்வதற்கான போராட்டத்தை நினைவு கூரும் விதத்தில் முன்னெடுக்கப்பட்ட இரண்டு வார நடைபயணி முடிவுக்கு வந்துள்ளது.

200 வருடங்களுக்கு முன்னர் மலையக தோட்டங்களில் வேலை பார்ப்பதற்காக வந்தவர்களை நினைவுகூரும் விதத்திலும் முன்னெடுக்கப்பட்ட நடைபயணத்தில் கலந்து கொண்டவர்களை நினைவில்



நிறுத்துகிறேன். - என அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

# உலமா சபை பிரதிநிதிகளை சந்தித்தார் ஹரீஸ் எம்.பி.

## முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராய்வு

அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமாவின் கல்முனை கிளை உறுப்பினர்களுக்கும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸுடனான சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை இரவு கல்முனை பள்ளி வீதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்தில் இடம்பெற்றது.



கல்முனை மக்கள் எதிர்நோக்கும் சமூக, சமய, கலாசார மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றியும் கல்முனையின் எதிர்கால நலத்திட்டங்கள் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இதன்போது கல்முனையின் வளர்ச்சிக்காக அனைத்து தரப்பினர்களும் கருத்து வேறுபாடுகளை தவிர்ந்து ஒன்றிணையும் அவசியத்தை வலியுறுத்தியும், போதைவஸ்து பாவனையால் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் பின்னடைவுகள், சமூக கலாசார ஒழுக்க விழுமியங்களின் சீரமைப்பு மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் பற்றியும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

குறித்த பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகளிடம் கலந்துரையாடி தக்க தீர்வை பெற்றுத்தருவதாகவும், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனை கிளையின் நலத்திட்டங்களுக்கு பூரண ஒத்துழைப்பு நல்குவதாகவும், தன்னால் இயன்ற உதவிகளை செய்வதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் உலமாக்களுக்கு உறுதியளித்தார்.

இந்த சந்திப்பின் போது அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனை கிளையால் 'வேற்றுமையில் ஒற்றுமை' எனும் தொனிப் பொருளில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (05)

# சாய்ந்தமருதுக்குப் பெருமை சேர்த்த கலாசார மத்திய நிலைய மாணவர்கள்





கலாசார அலுவல்கள் அமைச்சால் வருடம்தோறும் நடத்தப்பட்டு வரும் பிரதீபா - 2023 போட்டி தற்போது இடம்பெற்று வருகின்றது. இதில் ஓர் அங்கமான மாகாண மட்டப் போட்டிகள் மட்டக்களப்பு பிள்ளையாரடி மகா வித்தியாலயத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது. இந்தப் போட்டிகளில் சுமார் 15 இற்கு மேற்பட்ட மத்திய நிலையங்கள் பங்குபற்றியிருந்தன. அதில் முஸ்லிம் பிரிவில் சுமார் 07 மத்திய நிலையங்கள் கலந்துகொண்டன.

இந்த மாகாண மட்டப் போட்டிகளில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் முதல் முறையாகக் கலந்துகொண்டு சிரேஷ்ட நிகழ்ச்சியான கோலாட்டம் போட்டியிலும் மற்றும் கனிஷ்ட நிகழ்ச்சியான ரபான், கோலாட்டம் போட்டியிலும் கலந்துகொண்டது. இந்த இரண்டு பிரிவுகளில் கோலாட்டம் சிரேஷ்ட நிகழ்ச்சியில் 83 புள்ளிகளைப் பெற்று சாய்ந்தமருது வரலாற்றில் முதலாவதாகக் கலந்துகொண்ட போட்டியிலேயே முதல் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டு சாய்ந்தமருதுக்கு பெருமை சேர்க்கும் வகையில் வரலாற்றுச் சாதனை படைந்துள்ளது.

அதேபோல் மற்றுமொரு சாதனையாக கனிஷ்ட பிரிவு போட்டியில் ரபான் கோலாட்டம் 73 புள்ளிகளோடு இரண்டாமிடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டது. இது சாய்ந்தமருது வரலாற்றில் பாரியதொரு வெற்றியாகும். ஏனெனில், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் திறந்து எட்டு மாத காலப்பகுதியில் மிக நீண்ட காலமாக செயற்பட்டு வந்த மத்திய நிலையங்களை வீழ்த்தி இந்த வெற்றிச்சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

இந்த வெற்றியில் கலந்துகொண்ட கோலாட்ட பிரிவு மாணவர்களான எம்.எப்.எம்.றிஹ்பத், ஏ.ஜீ.எம். ஆஸிப், என்.ஹம்தி, என்.எம். இாம், ஜே.எம்.றிப்காஸ், என்.நப்ரின், ஜே.எம்.ராபீத், என்.எம்.அல்தாப், ஏ.எம்.எம். நுஸ்கி, என்.எம்.எம்.றுக்ஸான், ஏ.எம்.அஸ்ரி, ஏ.எம்.ஹபீஸ், ஜே.எம்.ஜகி, ஏ.எம்.எம். அர்ஷிக், எப்.எம்.ஹசீன், எஸ்.எம்.செளஸான், எச்.எம்.அப்ரத், ஜே.எம். சஹ்ரான், என்.ரீ.எம்.அஸ்ரிப் மற்றும் ரபான் கோலாட்ட பிரிவு மாணவர்களான ஜே.எம். ஜரிஹ், எம்.எப்.எம். அஸ்பல், எம்.எப்.எம்.பஹட், ஏ.ஆர்.எம். சப்கி, என்.அமைத் அஹமட், எஸ்.எம்.ஏ.மஹ்தி, எம்.ஆர். இஸ்ஸத், எம்.ஐ.எம்.அபான், எஸ்.எம். ஆதிப், எம்.பிஸ்மில்லாஹ், எம்.ஏ.எம்.அப்துல் ஹாதி, எப்.எம்.பர்ஹான், ஆர்.ஏ.எம்.அஹ்னாப், மற்றும் கலாசார மத்திய நிலையத்தில் இம் மாணவர்களைப் பயிற்றுவித்த வளவாளர்களான எம்.ஐ.எம். அமீர் (ஆசிரியர்), எம்.ஐ. அலாவுதீன் (மூத்தகலைஞர்), எம்.எச். பைசர் (மூத்த கலைஞர்), ஏ.எல்.எம். சாஜி (ஆசிரியர்) மற்றும் எஸ்.எச்.ஏ. கபூர் (வாத்தியம்) மற்றும் கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி. நௌசாத் ஆகியோர் உட்பட வெற்றிக்காகப் பங்கு பற்றி பாடுபட்ட அனைவருக்கும் கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி திரு.யூ.கே.எம். றிம்ஸான் வாழ்த்துக்களோடு பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் நீண்ட காலமாக கலாசார நிகழ்வுகள் தொடராக நடந்து வருகிறது. இருந்த போதிலும் அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தை வைபவ ரீதியாக இன்னும் திறக்கப்படாத நிலையில் இந்த வெற்றி கிடைத்தமை சவாலானதொரு விடயம். இதேவேளை இந்த வெற்றிக்காக முழுமூச்சாகவும் பக்க பலமாகவும் இருந்து மாணவர்கள் மத்தியில் இரவு-பகல் பாராது அயராது செயற்பட்டு இவ்வெற்றிக்கு காரணகர்த்தாவாகவும் உந்து சக்தியாகவும் அமைந்த நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான், இதற்கு பின்புலமாக இருந்து செயற்பட்ட சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் மற்றும் இம் மாணவர்களை போட்டியில் பங்குபற்ற அனுமதி வழங்கிய அதிபர்களுக்கும், மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் நன்றி தெரிவித்தார். (05)











# யாழ். வாலை அம்மன் சனசமூக நிலைய 80 ஆவது ஆண்டு நிறைவு அமுத விழா!

## வெகு விமரிசையாகக் கொண்டாட்டங்கள்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு வாலை அம்மன் சனச-மூகநிலைய 80 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வாலை அம்மன் சனசமூகநிலைய நிர்வாகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகள், சிறப்பு விருந்தினர்கள் வருகையோடு இரண்டு நாள்களும் வெகு சிறப்பாக இடம்பெற்றது .

அமுத விழா நிகழ்வின் போது, மேளதாள வாத்தியங்களுடன் விருந்தினர்கள் வரவேற்பு சிறப்பு நடனம், வரவேற்புரை , தலைமை உரை, சிறப்பு விருந்தினர்கள் உரை, அமுதவிழா நூல் வெளியீடு, வாலை அம்மன் சனசமூகநிலையத்தினரால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பண பரிசில்கள் வழங்கல், தென்னிந்தியதிரைப்பட பின்னணி பாடகர்களின் இசை நிகழ்வுகள் போன்றவை இடம்பெற்றன.

திருநெல்வேலி கிழக்கு வாலை அம்மன் சனசமூகநிலைய 80 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சனசமூகநிலைய நிர்வாகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட அமுத விழா நிகழ்வுகள் 12,13 இரண்டு நாள்களும் மாலை சிறப்பாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# மாமாங்கேஸ்வரருக்கு செல்லும் பக்தர்களிடம் வாகனதரிப்பிடக் கட்டணம் அதிகமாக அறவீடு

## கிழக்கு ஆளுநரிடம் பக்தர்கள் முறைப்பாடு

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலய திருவிழாவிற்கு செல்லும் பக்தர்களிடம் என்றுமில்லாதவாறு வாகன தரிப்பிட கட்டணமாக அதிக பணம் அறவிடப்பட்டு வருவதாகவும், இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் உடன் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.



ஈழத்தின் வரலாற்று புகழ்மிக்க ஆலயங்களுள் ஒன்றான மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த ஆடியமாவாசை மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ள நிலையில் ஆலயத்துக்கு செல்லும் பொதுமக்களின் வாகனங்களை தரித்து வைப்பதற்காக அதிகமான கட்டணங்களை தனி நபர்கள் சிலர் வசூலித்து வருவதாக பக்தர்கள் சிலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்திற்கு செல்ல கூடிய அனைத்து பாதைகளிலும் வீதியோர வியாபாரிகள் போன்று சிலர் 'வாகன தரிப்பிடம்' எனும் பதாதைகளை தனியார் காணிகளிலும், ஒழுங்கைகளிலும் காட்சிப்படுத்தியுள்ளதுடன், பலவந்தமாக பக்தர்கள் செல்லும் வாகனங்களை இடைமறித்து அடாவடித்தனமாக அதிக கட்டணங்களை வசூலித்து வருவதாகவும், அதற்காக பற்றுச் சீட்டுக்கள் எவையும் வழங்கப்படுவதில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

மேலும் மோட்டார் சைக்கிள் ஒன்றிற்கு 100 ரூபா தொடக்கம் 120 ரூபா வரையும், ஓட்டோவுக்கு 150 ரூபா தொடக்கம் 180 ரூபா வரையும் அறவிடப்பட்டு வருவதுடன், கார் உள்ளிட்ட வாகனங்களுக்கு 200 ரூபா தொடக்கம் 350 ரூபா வரை கட்டணமாக அறவிடுப்படுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர். இது தொடர்பில் ஆலய நிர்வாகம், மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டும் அவர்களால் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் கவலை வெளியிட்டதுடன், கிழக்கு மாகாண ஆளுநர் இது தொடர்பில் உடன் தலையிட்டு இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

அத்துடன் இது தொடர்பில் சமூக வலைத்தளங்களிலும் பதிவிட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# பிரிந்த வடக்கு கிழக்கில் இவ்வளவு அராஜகம் என்றால் இணைந்த வட –கிழக்கில் முஸ்லிம்களின் நிலை என்ன?

## கேள்வியெழுப்புகிறார் கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர்

நாவலடி காணி விவகாரத்தில் இடம் பெற்றுள்ளஇனவாதசெயற்பாட்டைநாங்கள் வன்மையாகக்கண்டிக்கிறோம். சட்டரீதியாக நீதிமன்றத்தால் பிரிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கை 13 ஆம் திருத்த சட்டமூலத்தின் பிரகாரம் மீளவும் இணைத்து பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை தமிழ் தரப்பு கோரிவரும் இந்நிலையில் பிரிந்த வடக்கு கிழக்கிலேயே சாணக்கியன் எம்.பி போன்றவர்களின் அடாவடித்தனம் இவ் வாறு இருக்கிறது என்றால் இணைந்த வடக்கு, கிழக்கில் முஸ்லிங்களின் வாழ்வியல்நிலைஎன்ன? என்றுகொழும்புமாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஐ. ஹலீலுர் ரஹ்மான் கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனின் முகத்திரை கிழிந்து அவரின் சொந்த முகம் இந்த நாவலடி விடயத்தில் அப்பட்டமாக வெளியாகியுள்ளது. அவருடன் இணைந்து பீ 2பீ பயணம் சென்ற முஸ்லிங்களின் மூத்த அரசியல்தலைவர்கள் உட்பட முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு அன்றும் சொன்னோம் இன்றும் சொல்கிறோம் முஸ்லிம்அரசியலின்வீரியத்தைகுறைத்து தங்களின் எண்ணங்களை நிறைவேற்ற இவர்கள் நாடகம் நடிக்கிறார்கள் என்று.

வீழ்ச்சி பாதையில் முஸ்லிம் அரசியல் சென்றுகொண்டிருக்கும்இந்தகாலகட்டத்தில் முஸ்லிம் இளைஞர்கள் அரசியல் விழிப்புணர்வு பெற்று முன்னுக்கு வந்து தங்களின் உரிமைகளைப் பற்றிப் பேச, வாதிட, போராடவேண்டும். வடக்கு-கிழக்கில் பாரம்பரிய அரசியலை செய்து கொண்டு, பயங்கரவாத புலிகளால் கொல்லப்பட்ட முஸ்லிம் ஜனஸாக்களை காட்டி அரசியல் செய்த முஸ்லிம் தலைவர்கள் மூலமாக முஸ்லிங்களுக்கு எந்த நன்மையையும் கிட்டவுமில்லை இனியும் கிட்டப்போவதில்லை. ஜனாஸாக்களை காரணம் காட்டி வந்த அரசியல் தலைமைகளின் வழிகாட்டலால் முஸ்லிம் சமூகமும் ஜனாஸாக்கள் போன்றே இன்று இருக்கிறது.


புலிகளினால் பாதிக்கப்பட்ட முஸ்லிங்களை பற்றிக் கூட முஸ்லிம் தலைவர்கள் நாடாளுமன்றத்தில் கதைக்கிறார்கள் இல்லை. காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, பொலன்னறுவை போன்ற எத்தனை ஊர்களில் கொத்துக்கொத்தாக விடுதலை புலிகளின் பசிக்கு முஸ்லிம்கள் இரையானார்கள் இவற்றையெல்லாம் பேசாமல் புலிகள் முஸ்லிம் ஜனாஸாக்களை எரித் தவற்றையெல்லாம் மறந்து கொரோனா ஜனாஸாக்களை மட்டும் அடிக்கடி மீட்டிக்கொண்டு முஸ்லிம் தலைவர்கள் வங்குரோத்து அரசியல் செய்கிறார்கள்.

2000 இற்குப் பின்னர் பிறந்த முஸ்லிம் சந்ததிகளுக்கு வடக்கு கிழக்கின் கடந்தகால அரசியல் பற்றிய அறிவு போதாது. வடக்கு கிழக்குக்கு வெளியே இருந்த இளைஞராக தொடர்ந்தும் நாங்கள் எங்களின் முஸ்லிம் சமூகத்தின் நலனுக்காக குரல்கொடுத்துள்ளோம். துண்டுப்பிரசுரங்கள் மூலமாக நாட்டை விழிப்புணர்வு செய்துள்ளோம், வடக்கு கிழக்கில் முஸ்லிங்கள் பாதிக்கப்பட்ட போது கொழும்பில் கடையடைத்து போராட்டம் நடத்தியுள்ளோம். அந்த காலத்தில் இப்போதுள்ள கல்முனை தொகுதி எம்.பி. ஹரீஸ் தலைமையிலான மெஸ்ரோ கிழக்கில்புலிகளைஎதிர்த்துமுஸ்லிங்களின் இருப்புக்காக போராடியது. அவருடன் அந்த காலத்திலையே நாங்கள் தொடர்புபட்டு இணைந்து முஸ்லிம்களுக்காகக் குரல்கொடுத்துள்ளோம்.

முஸ்லிங்களின் அரசியல் விடயங்கள் மந்தகதியில் உள்ளதாலும் முஸ்லிம் தலைவர்களின் அரசியல் நடவடிக்கை சோரம்போகும்தன்மையாகஇருப்பதாலும் முஸ்லிம் இளைஞர்களின் அரசியல் செயற்பாடுகள் போதாமல் உள்ளது. முஸ்லிம்அரசியலைமேம்படுத்தமுஸ்லிம் இளைஞர்கள் துணிந்து முன்வந்து அரசியலில் விழிப்புணர்வு பெற்று உரிமைகளுக்காக உரத்து குரல்கொடுக்க முன்வரவேண்டும். - என்றார். (05)

# மேர்வின் சில்வாவுக்கு மன நலம் பாதிப்பு

## மனோ கணேசன் சாட்டை





“தமிழரின் தலையைக் கொய்து வருவேன்’ எனக் கொக்கரிக்கும் மேர்வின் சில்வா மனநலம் பாதிக்கப் பட்டவர் என்பது நாடறிந்த சங்கதிஎனதமிழ்முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயேஅவர்இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

ராஜபக்ஷ குடும்பத்தை திருடர்கள், தரகு பணம் பெற்றவர்கள் எனக்கூறும் மேர்வின் சில்வா அந்த குடும்பத்துடனேயேகுடும்பம் நடத்திவந்தார் என்பதும் நாடறிந்த செய்தி. ஒரு வேளை அத்தகைய திருட்டு தரகு பணம் பெறும் பிரச்சினையால், ராஜபக்ஷர்களுடன்நடத்தியகுடும்பம் பிரிந்ததோ என்றகேள்வியும் இந்நாட்டுமக்கள்மனங்களில் எழுந்துள்ளன.

எல்லாவற்றையும் மிஞ்சிய உலகமகா கேலிகூத்து என்னவென்றால் உலகத்துக்கு அஹிம்சையை போதித்த போதிசத்துவர் பெயரில் இவர் தமிழர்களின் தலையை வெட்டுவாராம். இவரை போன்றவர்களிடமிருந்து பௌத்தை போதிசத்து-வர்தான் மீண்டும் பிறந்து வந்து காப்பாற்ற வேண்டும்.

அத்துடன்முன்னையை ராஜபக்ஷ ஆட்சி காலத்தில், ஊடகவியலாளர்களின் கால்களை உடைப்பேன் என்றும் இவர் சொன்னார். அப்புறம் அரச ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு சென்று தன் தலையையே உடைத்துக்கொண்டு வந்தார். பின்னர் தேர்தலில் போட்டியிட்டு சிங்கள மக்களாலேயே அரசியலில் இருந்து விரட்டப்பட்டார். நாட்டில், விகாரைகளையோ, கோவில்களையோ, பள்ளிகளையோ, தேவாலயங்களையோ கட்டுவிப்பதில், பூஜைகளை செய்வதில் இடைஞ்சல்கள் ஏற்பட்டால், அதை சட்டப்படி அணுக வேண்டும்.

அந்த சட்டமும் அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும்.

‘தமிழர் தலைகளை கொய்து வருவேன்’ என்ற இப்படி தலை வெட்டும் காலம் எல்லாம் இப்போது மலையேறி விட்டது. இவரை பாரதூரமானவராக எடுக்க தேவையில்லை. ஆனால், இவரது கருத்து, பாரதூரமானது. நாட்டில் இன மத குரோதத்தை உருவாக்கும் கருத்து. இவருக்கு எதிராக சட்டம் பாய வேண்டும். அரசில் இருக்கும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் இதுபற்றி தங்கள் தலைவர்களான ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் முறைப்பாடு செய்ய வேண்டும். - இவ்வாறு மனோ தெரிவித்துள்ளார். (05)

# பம்பலப்பிட்டி – டூப்ளிகேன் வீதியில் விபத்து;7 பேர் காயம்

பம்பலப்பிட்டி - டூப்ளிகேன் வீதியில் இடம்பெற்ற விபத்தில் 7 பேர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று (திங்கட்கிழமை) கொழும்பில் இருந்து கதிர்காமம் நோக்கிபயணித்ததனியார்பஸ்போக்குவரத்துசமிக்ஞைகளை மீறி பயணித்த போதே தும்முல்லயிலிருந்து வந்த லொறி ஒன்றுடன் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் பெண்கள் இருவரும் ஆண்கள் ஐவர் காயமடைந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர் மேலும் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# கோதுமை மா தட்டுப்பாடு ஏற்படும் அபாய நிலைமை

இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா கையிருப்பில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக புறக்கோட்டை கோதுமை மா இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பிரீமா மற்றும் செரண்டிப் தவிர அனைத்து இறக்குமதியாளர்களுக்கும் கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கு கடந்த ஜூலை 16 ஆம் திகதி முதல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களம் தடை விதித்துள்ளது.

தடை விதிக்கப்பட்ட நேரத்தில், புறக்கோட்டை மொத்த விற்பனையாளர்களிடம் கோதுமை மா பாரிய அளவில் கையிருப்பில் இருந்தது.

அது தற்போது தீர்ந்து வருவதாகவும் இந்த நிலை காரணமாக சந்தையில் கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என புறக்கோட்டை கோதுமை மா இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக விலையில் அதிகரிப்பு ஏற்படலாம் என அந்த சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். பிரீமா மற்றும் செரண்டிப் நிறுவனங்கள் கடந்த மாதம் 18 ஆம் திகதி ஒரு கிலோ கோதுமை மாவின் விலையை 10 ரூபாவால் குறைத்திருந்த நிலையில், தற்போது சந்தையில் ஒரு கிலோ கோதுமை மா 220 ரூபாவிற்கு விற்பனை செய்-யப்படுகிறது.

இதேவேளை, பெரிய வெங்காயம் இறக்குமதி செய்வதால் உரிய விலை கிடைப்பதில்லைஎனஉள்ளூர் பெரிய வெங்காய விவசா-யிகள் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர். (05)

# மரக்கறி விலை அதிகரிப்பு அதிர்ச்சியில் மக்கள்

யாழில் நேற்று திடீரென மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று தந்தையை இழந்த இந்துக்கள் அவர்களது நினைவாக விரதமிருந்து பிதிர் கடன் செய்யவுள்ள நிலையிலேயே மரக்கறிகள் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஒரு கிலோ காத்தோட்டியம் காய் 3,200 ரூபாவுக்கும், பாகற்காய் 800 ரூபாவுக்கும், பயற்றங்காய் 400 ரூபாவுக்கும், மிளகாய் 550 ரூபாவுக்கும், கத்தரிக்காய் 350 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# இலங்கையில் சுரங்கத்துக்குள் உருவாக்கப்பட்ட உணவகம்

இலங்கையில் முதன்மு-றையாக, நிலத்துக்கு அடியில் 124 மீற்றர் தொலைவில் போகல காரீய சுரங்கத்தில் உணவகமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த உணவகத்தில் ஒரே நேரத்தில் 15 பேர் அமர்ந்து உணவருந்தக் கூடிய வசதி உள்ளதாக போகல காரீய சுரங்கத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அமில ஜயசிங்க தெரிவித்தார்.

மேலும், இந்த உணவகத்தின் ஊடாக காரீயம் வெட்டும் தொழிலாளர்களுக்கும், சுரங்கத்துக்கு வரும் மக்களுக்கும் உணவு வழங்கும் வாய்ப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

1865 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட போகல காரீய சுரங்கமானது உயர்தர காரீய ஏற்றுமதி மூலம் உலகில் உயர்ந்த நற்பெயரை பெற்றுள்ளது. ஜேர்மனி, ஜப்பான், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு காரீயம் ஏற்றுமதி செய்து நாட்டுக்கு அதிக அளவில் அந்நிய செலாவணியை இந்த காரீய சுரங்கம் ஈட்டித்தருவதாக அதன் நிறைவேற்று அதிகாரி அமில ஜயசிங்க தெரிவித்துள்ளார். (05)

# குளவிக் கொட்டுக்கு இலக்கான பெண் சாவு

## காரைநகரில் சோகம்

யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியில் குளவி கொட்டுக்கு இலக்கான 63 வயதான பெண்ணொருவர் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார். காரைநகர் களபூமியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சிவபாக்கியம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் ஆலயம் ஒன்றில் சிரமதான பணியில் ஈடுபட்டிருந்த வேளை குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளார் எனவும் அதனை அடுத்து , வலந்தலை ஆரம்ப வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் , அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# யால தேசிய பூங்காவிற்குள் பவுஸர்கள் மூலம் நீர் நிரப்பல்

யால தேசிய பூங்காவில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக நீர் பவுஸர்கள் மூலம் குளங்கள் மற்றும் நீரோடைகளை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விலங்குகளுக்கு செயற்கையாக குளங்கள் மற்றும் ஓடைகளில் நீர் நிலைகளை பராமரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (05)

# மாத்தறையில் ஒருவர் வெட்டிப் படுகொலை!

ஒரு பிள்ளையின் தந்தை கூரிய ஆயுதங்களால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளார். இந்தச்சம்பவம் நேற்று அதிகாலை மாத்தறை - தொடங்கொட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

37 வயதுடைய திமுத் சாமிக்க என்ற குடும்பஸ்தரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படாத நிலையில், சந்தேகநபரைக் கண்டுபிடிக்கும் நோக்கில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அதிகாரப் பரவலாக்கலைவிட மாகாண தேர்தலே முக்கியம்

## ஜி.எல். பீரிஸ் வலியுறுத்து



அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக பேசும் முன்னர், மாகாணசபைத் தேர்தலை அரசாங்கம் முதலில் நடத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜிஎல் பீரிஸ் வலியுறுத்தினார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்ம விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

’மாகாணசபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகள் நியமிக்கப்படும்-வரை ஆளுநர்களுக்கு ஆலோசனைகளை வழங்க, ஆலோசனைசபையொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்று அரசாங்கம் கூறியுள்ளது.

ஆளுநர்களுக்கு அறிவுரை வழங்க ஆலோசனை சபையை நிறுவுவதைவிட, மாகாண சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளை முதலில் நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மக்கள் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட ஓர் உறுப்பினர்கூட, ஒன்பது மாகாணங்களுக்கும் இன்று இல்லை.

மக்களின் வாக்குகளால் தெரிவு செய்-யப்பட்ட பிரதிநிதிகளுக்கு அதிகாரத்தை பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதே 13 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

எனவே, மாகாணசபைத் தேர்தலை முதலில் நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவர்கள் ஜனாதிபதித் தேர்தலை ஒருபோதும் முன்கூட்டியே நடத்த மாட்டார்கள். எனினும் உரிய நேரத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியே ஆக வேண்டும்.

இன்னும் 365 நாள்களில் தேர்தல் நடைபெற வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

அத்தோடு, தேர்தலை பிற்போடும் மக்கள் ஆணைக்கூட இந்த அரசாங்கத்துக்குக் கிடையாது.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக பேச முன்னர் மாகாணசபைத் தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம்’ என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)



# பிறந்ததும் தவறி கீழே வீழ்ந்து இறந்த சிசு

சுகாதாரப் பிரிவின் கவனக்குறைவால் நாட்டில் அண்மைக்காலமாக பல மரணங்கள் பதிவாகி வரும் நிலையில் மற்றுமொரு மரணமும் பதிவாகியுள்ளது. மருத்துவ ஊழியர்களின் தவறால் பிரசவ நேரத்தில் பிரசவ அறையின் தரையில் வீழ்ந்த சிசு ஒன்று, அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கல்லஞ்சிய என்ற கிராமத்தைச் சேர்ந்த தாய் ஒருவர் பிரசவத்துக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போதே இந்த சம்பவம் நேர்ந்துள்ளது.

பிரசவ நேரத்தில், மருத்துவ ஊழியர்களால் குழந்தையைப் பிடிக்க முடியாமல் தரையில் வீழ்ந்துவிட்டதாக குழந்தையின் தந்தை தெரிவித்துள்ளார். இதேவேளை, பிரேதப் பரிசோதனையில் குழந்தை கீழே வீழ்ந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

குழந்தையின் சடலம் மேலதிக விசாரணைகளுக்காக வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# மாவைக் கந்தனின் தேர் நேற்று சிறப்புற நடந்தது



வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வருடாந்திர மகோற்சவ தேர்த் திருவிழா நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்றது. அந்தவகையில் காலை நடைபெற்ற வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து, ஆறுமுகசுவாமி வள்ளி, தெய்வானை சமேதரராய் விநாயகபெருமானுடன் தேரில் உள்வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார். (05)

## சசித்ர சேனாநாயக்க வெளிநாடு செல்ல தடை!

இலங்கை கிரிக்கெட் முன்னாள் வீரர் சசித்ர சேனாநாயக்க வெளிநாடு செல்வதற்கு தடை விதித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஆட்ட நிர்ணய சம்பவம் தொடர்பான விசாரணை தொடர்பான உண்மைகளை நீதிமன்றில் அறிக்கை செய்ததன் பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மூன்று மாத காலத்திற்கு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2020 லங்கா பிரீமியர் லீக்கின் முதல் சீசனில் பங்கேற்ற இரண்டு கிரிக்கெட் வீரர்களை தொலைபேசி அழைப்புகள் மூலம் அணுகி, போட்டியின் போது ஆட்ட நிர்ணயம் செய்ய தூண்டியதாக கூறப்படுகிறது.

குற்றச்சாட்டிற்கு போதுமான ஆதாரங்கள் திரட்டப்பட்டதால், முன்னாள் வீரருக்கு எதிராக கிரிமினல் குற்றச்சாட்டுகளை பதிவு செய்யுமாறு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் விசேட புலனாய்வு பிரிவுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

38 வயதான அவர், முதலாவது லங்கா பிரீமியர் லீக் தொடரின் போது பங்கேற்கும் இரண்டு கிரிக்கெட் வீரர்களை டுபாயில் இருந்து தொலைபேசி அழைப்புகள் மூலம் அணுகி, போட்டியின் போது போட்டிகளை 'ஃபிக்ஸ்' செய்ய தூண்டினார்.

லங்கா பிரீமியர் லீக் 2020 ஆம் ஆண்டு நவம்பர் 27 முதல் டிசெம்பர் 17 வரை அம்பாந்தோட்டையில் நடைபெற்றது. எவ்வாறாயினும், இலங்கையின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் இந்த குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார். (05)



## கத்தோலிக்க ஊடக இணைய தொகுப்பாளர் டிரோன் மறைவு

மன்னார் கத்தோலிக்க ஊடகத்தின் இணையத் தொகுப்பாளர் ஜெகநாதன் டிரோன் தனது 27 ஆவது வயதில் ஞாயிற்றுக்கிழமை இரவு மடுவில் காலமானார்.

கடமை நிமித்தம் மடுத் திருவிழாவுக்குச் சென்ற நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு திடீர் என ஏற்பட்ட சுகவீனம் காரணமாக மடு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையிலலேயே அவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவரது உயிரிழப்பிற்கான காரணம் இது வரை கண்டறியப்படவில்லை. இந்நிலையில் அவரது சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (05)

## பொலிஸார் வேண்டாம்; இராணுவமே வேண்டும்

### யாழில் போராட்டம்





'பொலிஸார் மீது நம்பிக்கை இல்லை. எனவே எமது பிரதேசத்தில் உள்ள இராணுவ முகாமை அகற்ற வேண்டாம்' எனத் தெரிவித்து யாழ்ப்பாணம் வடமராட்சி கற்கோவளம் பகுதி மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் நேற்று (திங்கட்கிழமை) ஈடுபட்டனர்.

கற்கோவளம் பகுதியில் அமைந்துள்ள 4 ஆவது சிங்க றெஜிமென்ட படையணி இராணுவ முகாமை அகற்ற வேண்டாம் எனக் கோரியே இவ்வாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது 'பொலிஸார் மீது நம்பிக்கை இல்லை. பொலிஸார் சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில்லை. இராணுவத்தின் மீதே எங்களுக்கு நம்பிக்கை உள்ளது.

தனியார் காணியில் உள்ள இராணுவ முகாமை மாற்றுவதாக இருந்தால், அரச காணியில் உள்ள இராணுவ முகாமை அமையுங்கள். - எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்திருந்தனர். (05)

## 13ஐ அமுல்படுத்த ரணிலால் முடியாது

### மொட்டுக் கட்சி திட்டவட்ட அறிவிப்பு

ரணில் விக்கிரமசிங்க மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதியாக இருப்பதால் அவரால் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாது என்று மொட்டுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

13 ஐ நடைமுறைப்படுத்துவதற்கும் அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகின்றார். தமிழ்க் கட்சிகளையும் அழைத்துப் பேசி வருகின்றார்.

இந்தியா சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் இதை அமுல்படுத்துவதாக வாக்குறுதியும் வழங்கியுள்ளார்.

இந்நிலையில், சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி இதற்கான நடவடிக்கையை ஜனாதிபதி மேற்கொண்டு வருகின்றார். 13 ஐ அமுல்படுத்துவதற்கான யோசனையைக் கட்சிகளிடம் இருந்தும் அவர் கோரியுள்ளார்.

இந்தநிலையில், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் மொட்டுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், 13 ஐ அமுல்படுத்துவதற்கான அதிகாரம் ரணிலிடம் இல்லை என்றும் கூறியுள்ளனர்.

## வெஸ்பர் ஆராதனை மடுவில் ஒப்புகொடுப்பு

மன்னார், மடுதிருத்தலத்தின் திருவிழாவை முன்னிட்டு வெஸ்பர் ஆராதனை நேற்று (திங்கட்கிழமை) ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார், மடு திருத்தலத்தின் வேஸ்பர் ஆராதனை நேற்று லட்சக்கணக்கான யாத்திரிகள் முன்னிலையில் இடம்பெற்றது. இதற்காக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் வருகை தந்திருந்தனர்.

இன்று மடு திருத்தலத்தின் திருவிழா இடம்பெறவுள்ள நிலையில், சுமார் 7 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் இதில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இதனால், வருகை தரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மேலும் திருவிழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ள உள்ள நிலையில் விசேட பாதுகாப்புகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா திருப்பலி, இன்று காலை 6.15 மணிக்கு திருத்தந்தையின் பிரதிநிதி தலைமையில் ஆயர்கள் இணைந்து கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்க உள்ளனர். (05)

## உறவினர்களுடன் நீராட சென்றவர் தியகொலராவ ஆற்றில் மூழ்கி சாவு

ஆற்றில் தனது உறவினருடன் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கிச் சாவடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊவா பரணகம -ரத்தம்ப தியகொலராவ ஆற்றில் மூழ்கியே குறித்த இளைஞர் உயிரிழந்துள்ளார்.

நுவரெலியா, கந்தப்பளைப் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரே ஞாயிற்றுக்கிழமை மாலை உயிரிழந்தார்.

நீரில் மூழ்கி உயிரிழந்த இளைஞரின் சடலம் ஊவா பரணகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்

### 17 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று

## செஞ்சோலைப் படுகொலைகளால் கண்ணீரில் தோய்ந்தது வள்ளிபுனம்

செஞ்சொலைப் படுகொலையின் 17 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று முல்லைத்தீவு - வள்ளிபுனம் பகுதியில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு - வள்ளிபுனம் செஞ்சோலை வளாகத்தில், கடந்த 2006.08.14 அன்று இலங்கை விமானப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விமானக்குண்டுவீச்சுத் தாக்குதலில் முகாமைத்துவ கற்கைநெறியில் ஈடுபட்டிருந்த 53 மாணவியர்களும், நான்கு பணியாளர்களும் படுகொலைசெய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு படுகொலைசெய்யப்பட்டவர்களுடைய 17ஆம் ஆண்டு நிவேந்தல் நேற்று முல்லைத்தீவு வள்ளிபுனம்பகுதியில் உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டது.

தாயக மற்றும், புலம்பெயர் உறவுகளின் அனுசரணையுடன், தாய்த்தமிழ் பேரவையின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த அஞ்சலி நிகழ்வு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு ஆரம்பமானது.

இந்தப் படுகொலைச் சம்பவத்தின்போது உயிர் நீத்த உடையார்கட்டு மகாவித்தியாலய மாணவியர்களான கனகலிங்கம் நிருஷா, கனகலிங்கம் நிருபா ஆகிய சகோதரிகளின் தாயார் கனகலிங்கம் தவமணி பொதுச்சுடரை ஏற்றிவைத்தார்.

இந் நிகழ்வில் தொடர்ந்து படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்த மாணவியர்களுக்கும், பணியாளர்களுக்கும் அவர்களுடைய உறவினர்களால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலர்தூவி, கண்ணீர்சொரிந்து உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்று, பொதுமக்களின் மலர்வணக்கம் என்பனவும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் சண்முகராஜா ஜீவன், முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் இரத்தினம் ஜெகதீசன், இலங்கைத்தமிழரசுக்கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், சமூக செயற்பாட்டாளர்கள், படுகொலைசெய்யப்பட்டவர்களின் உறவுகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

யாழ். பல்கலைக்கழகத்திலும் நேற்று செஞ்சோலை படுகொலையின் 17 ஆவது ஆண்டு நினைவேந்தல் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக பிரதான தூபி வளாகத்தில் ஒன்று கூடிய மாணவர்கள் உயிர்நீத்த பாடசாலை மாணவர்களின் உருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தி ஈகைசுடரேற்றி ஒரு நிமிட அகவணக்கமும் செலுத்தினர்.

இதனையடுத்து செஞ்சோலை படுகொலையின் நினைவுரை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் சில்வஸ்டர் ஜெல்சின் ஆற்றினார். (05)

## பீடி இலைகள் சிக்கின

(ந.லோகதயாளன்)



இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடத்த முற்பட்டதாகக் கூறப்படும் ஆயிரம் கிலோ பீடி இலை நேற்று அதிகாலை இராமேஸ்வரம் நதிப்பாலம் விலக்கில் வைத்து இந்திய சுங்கத்துறையால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தியாவின் தமிழ்நாடு ஊடாக இலங்கைக்குக்

கடத்த கொண்டு வரப்பட்ட 20 மூடைகளில் ஆயிரத்து 99 கிலோ பீடி இலைகள் இருந்தன என்று இராமநாதபுரம் சுங்கத்துறையினர் தெரிவித்தனர்.

அவர்கள் 3 சந்தேகநபர்களையும் கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.08.2023இல் வெளியிடப்பெற்றது.